# சாளரம்

நவம்பர் டிசம்பர் 1991

விலை : 12 ரூபா



இளையோர் திங்கள் இதழ்

மரங்கள்
வளம்மிக்க
வாழ்க்கைச் சூழலிற்கான
இயற்கையின் வரங்கள்!

மரங்களை
அழியவிடாது பாதுகாப்போம்
மேலும்
புதிய மரங்களை
நட்டு வளர்ப்போம்!

தமிழர்
புனர்வாழ்வுக்
கழகம்
83/2, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்
யாழ்ப்பாணம்.

உள்ளே.....

- ☐ ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழரும்
- ☐ போரும் அரசியலும்
- ☐ ஆசிரியன் மாணவனே
- ☐ மறைக்கப்பட்ட வரலாறு
- ☐ சார்ந்து வாழல் ஓர் இயற்கை இயல்பு?
- ☐ ஆசிரியர் கௌரவம்
- ☐ பள்ளிக்கூடங்களில் உடற்கல்வி
- ☐ இன்றைய தமிழன் எது செய்யவேண்டும்
- ☐ மானம் காத்த மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன்
- ☐ குட்டிக் கதை
- ☐ குறுக்கெழுத்துப் போட்டி
- ☐ நிலாமுற்றம்
- ☐ அரும்புகள்
- ☐ தெறிப்பு
- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ சாளரம் ஆய்வரங்கு
- ☐ மாவீரரை நினைவு கூருவோம்!

# ஐக்கியதேசியக்கட்சியும் தமிழரும்

## 1946 - 1970 வரை

இலங்கையில் தோற்றம் பெற்ற நான்காவது அரசியற்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். இது 1946 ஆம் ஆண்டு டி. எஸ். சேன நாயக்கா தலைமையில் தோன்றியது. இதற்கு முன்னர் 1935 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியும் 1943 ஆம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் 1944 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் தோன்றின. ஐ. தே. கவின் பின்பு 1949 ஆம் ஆண்டு சமஷ்டிக் கட்சியும் (தமிழரசுக் கட்சி) 1951 ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தோன்றின.

1944 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற இருந்த முதலாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பொருட்டு டி. எஸ். சேன நாயக்கா ஐ. தே. கவை ஸ்தாபித்தார். ஐ. தே. கவில் பல தமிழர்கள் இணைந்து கொண்டனர். குறிப்பாக ஏ. மகாதேவா வி. குமாரசாமி ஆகியோர் இதில் அடங்குவர். இக்கட்சி தேசிய ஐக்கியம் பற்றி அதிகம் பேசியது. தமிழும், சிங்களமும் நாட்டின் உத்தியோக மொழியாக வேண்டுமென ஆரம்பத்தில் இக்கட்சி கூறி வந்தது. அதேவேளை தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை இக்கட்சி ஏற்படுத்திவந்தது.

1947 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுக்கு எதிராக இக்கட்சி தீவிரமாகச் செயற்பட்டது. ஐ. தே. க. வேட்பாளரான த. மகாதேவா தமிழ்க் காங்கிரஸால் தோற்கடிக்கப்பட்டார். ஆயினும் சாவகச்சேரி தொகுதியில் வி. குமாரசாமி வெற்றி பெற்று அமைச்சருமானார். தேர்தல் முடிந்த சில மாதங்களில் ஐ. தே. கவும் தமிழ்க் காங்கிரசும் நெருங்கிய கூட்டாளிகளாயினர். காங். கட்சித் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அமைச்சரானார் இதன் பின்பு டி. எஸ் சேனநாயகா அரசாங்கம் மலையகத் தமிழரின் வார்க்குரிமையையும், பிரஜாவுரிமையையும் பறித்தது. இன மத மொழி பாகுபாடின்மையை ஒரு புறம் தன் கொள்கையாகப் பிரகடனப் படுத்திக் கொண்டும், தமிழ்த் தலைவர்களைத் தன் பக்கம் அணைத்துக் கொண்டும் மறுபுறம் தமிழர்களை ஒடுக்கியும் வந்தது.

**- சாரணன் -**

தமிழுக்கும் சம அந்தஸ்து என்ற பிரகடனத்தைக் கொண்டிருந்த ஐ. தே. க. 1955 ஆம் ஆண்டு களனி மாநாட்டில் தனிச் சிங்களச் சட்டம் வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐ. தே. க பதவிக்கு வரமுடியாது தோற்றுப்போன போதிலும் தனிச் சிங்கள மசோதாவுக்குச் சார்பாக வாக்களித்தது.

1957 ம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தம் நிகழ்ந்தது. அதற்கெதிராக ஜ. தே. க. பாத யாத்திரையை ஜே.ஆர். தலைமையில் நடாத்தியது, ஐ. தே. கவால் தூண்டப்பட்ட தொடர்ச்சியான எதிர்ப்புகளின் பலனாக இறுதியில் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. 1965 ஆம் ஆண்டு தனிக்கட்சியாக ஐ. தே. க அரசாங்கம் அமைக்க முடியாத சூழலில் தமிழரசுக் கட்சியின் உதவியுடன் கூட்டரசாங்கம் அமைத்தது. தமிழரசுக் கட்சிக்கும் ஐ. தே. கவுக்கும் இடையில் டட்லி—செல்வா ஒப்பந்தம் நிகழ்ந்தது. இவ் ஒப்பந்தத்தின் எச்சரத்தையும் நிறைவேற்றாமல் 1970 ம் ஆண்டு வரை ஐ தே. க. பதவியில் நீடித்தது. இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் உரிய ஐந்து வருட ஆட்சிக்காலத்தை நிறைவேற்றிய முதலாவது அரசாங்கம் ஐ.தே.க. அரசாங்கமாகும். இதில் விசித்திரமென்னவெனில் தமிழரின் துணையைக் கொண்டே தமிழருக்கு எந்த உரிமையும் வழங்காது ஐந்து வருடம் ஆட்சயில் இருந்ததுதான். 1969 ம் ஆண்டு தமிழரசுக்கட்சி வெளியேறிய போதும் ஐ. தே. க. பதவியில் நீடிக்க ஆதரவு அளித்தே வந்தது.

தமிழரின் துணையைப் பெற்று தமிழரை அணைத்து அறுத்ததில் டி. எஸ். சேனனாயக்காவும், ஜே. ஆர். ஜயவர்த்தனாவும் ஒரு தனி இடம் வகிக்கின்றனர். அற்ப சலுகைகளைத் தமிழ் தலைவர்களுக்குக் கொடுத்து முழுத்தமிழ் இனத்தையும் கருவறுக்கும் வித்தைக்கு மரபுவாதத் தமிழ்த் தலைவர்கள் அனைவருமே பெரிதும் பலியாகினர் என்று கூறலாம்.

## போரியல் கல்வி அத்தியம்-2

# போரும் அரசியலும்

போர் வேறு அரசியல் வேறல்ல. அரிசி வேறு சோறு வேறாகுமா? வேகவைத்த அரிசிதான் சோறு. இந்த விதத்தில் நோக்கினால் அரிசியும் சோறும் வேறல்ல தான். ஆனால் அரிசியை அப்படியே உண்ணமுடியாது. சோறு உண்ணக்கூடிய நிலைக்கு மாற்றப்பட்ட அரிசி யாகும். இந்த அர்த்தத்தில் பார்க்கப் போனால் அரிசி யும் சோறம் வேறுவேறானவைதான். இவ்விதமாகத் தான் போரும் தன்மட்டில் தானே ஒரு அரசியல்தான். இராணுவ மோதல்களின் மூலம் இரததம் சிந்தப்படும் அரசியலே போராகும். இவ்விதம் இரத்தஞ் சிந்தாது நடைபெறும் போராட்டமே அரசியலாகும். அதேநேரத் தில் போர் என்னும் அரசியல், சாதாரண அரசியலில் இருந்து சோறு அரிசியில் இருந்து வேறுபடுமாப் போல் நிரம்பவும் வேறுபட்டது.

மனித சமூகம் பல்வேறு பொருளாதார காரணங்க ளால் வெவ்வேறு சமூக நலனுள்ள பல்வேறு குழுமங்க ளாக பிரிபட்டுள்ளது. ஆளும் இனம்- ஆளப்படும் இனம், மேலாதிக்கம் மிக்க மதம்- ஒதுக்கபடும் மதம், ஒடுக்கும் சாதி- ஒடுக்கப்படும் சாதி, ஆண்மேலாதிக்க வாதிகள்- பெண்நிலைவாதிகள், சுரண்டும்வர்க்கம்- சுரண்டப்படும் வர்க்கம், ஏகாதிபத்திய நாடுகள் - நவ- காலனிநாடுகள், முதலாளித்துவ நாடுகள் - சோஷலிஸ நாடுகள், போன்ற குழுமங்கள் வெவ்வேறு நலன்கொண்ட சமூக குழுமங்க ளுக்கு சில உதாரணங்களாகும். வெவ்வேறு நலன்கள் இருப்பதால் அவற்றினிடையே முரண்பாடுகளும் இருக் கும் என்பது இயல்புதானே. இம் முரண்பாடுகளைத் தீர்ப் பதற்காக பிரிந்து நிற்கும் இவ்விரு பகுதிகளும் தமக் குள் ஓயாது போராடிக் கொண்டே இருப்பார்கள். ஆளும் இனமும் ஆளப்படும் இனமும் ஒன்றுடன் ஒன்று போராடு கின்றன. சுரண்டும் வர்க்கமும் சுரண்டப்படும் வர்க்க மும் ஒன்றுடன் ஒன்று போராடுகின்றன. இவ்விதமாக முரண்பட்ட இரு பகுதிகளும் தமக்குள் ஒன்றுடன் ஒன்று போராடிக் கொண்டேயிருக்கின்றன. இடைவிடாத போராட்டம் இப்போராட்டங்களின் ஒட்டு மொத்தந்தான் மனித சமூக வரலாறாகும்.

இம் முரண்பாடுகளின் செயற்பாடுகள் பற்றிய தத் துவங்கள், கோட்பாடுகள், கொள்கைகள், தந்திரோபா யங்கள், கண்ணோட்டங்கள் ஆகியனவற்றின் ஒட்டு மொத்த தொகுப்பே அரசியல் எனப்படும். ஆகவே முரண் பட்டு நிற்கும் ஒவ்வொரு பிரிவும் தனக்குத்தனக் கென்று தனியான ஒரு அரசியலைக் கொண்டுள்ளது. ஒடுக்கும் இனத்தின் அரசியல் - ஒடுக்கப்படும் இனத் தின் அரசியல், சுரண்டும் வர்க்கத்தின் அரசியல்- சுரண் டப்படும் வர்க்கத்தின் அரசியல், ஏகாதியபத்தி அரசியல்- நவ - காலனியல் நாடுகளின் அரசியல் என இவ்வித மாக தனித்தனி அரசியல் உண்டு.

வெவ்வேறு சமூகப் பிரிவினரிடையே நிலவும் முரண் பாடுகள் இரு வகையானது. ஒன்று சிநேக முரண்பாடு. மற்றையது பகை முரண்பாடு. எந்தவளியிலும் ஒத்துப் போக முடியாத இரு அங்கங்களுக்கு இடையே உள்ள முரண்பாடு பகை முரண்பாடுகள் எனப்படும். முன்பு கூறப்பட்ட உதாரணங்கள் அனைத்தும் பகை முரண் பாட்டிற்குரியவையேயாகும். தொழிலாளி- விவசாயி, ஆசிரியர்- மாணவன், புத்திஜீவிகள் - மக்கள் ஆகியோ ரிடையே நிலவும் முரண்பாடுகள் சிநேக முரண்பாடுக ளாகும்.

சிநேக முரண்பாடுகளைக் கையாள்வதற்கான அர சியல் பலாத்காரமற்ற வழிவகையைச் சேர்ந்ததாகும். பகை முரண்பாடுகளை கையாள்வதற்கான அரசியல் பலாத்கார வழிவகை அரசியலாகும்.

பலாத்கார வழிவகை என்பது பலரகமானது. மக் கள் கிளர்ச்சிகள், சட்டமறுப்புகள், வேலை நிறுத்தங் கள், மறியல் போராட்டங்கள். ஆயுதம் தாங்கிய மக் களின் எழுச்சி நடவடிக்கைகள், போர் ஆகியவை பலாத் கார வழிவகைகளுக்கு சில உதாரணமாகும்.

சுருக்கமாகச் சொன்னால் பலாத்காரபோராட்டங் கள் இராணுவரீதியான மோதல்களற்ற போராட்டங் கள், இராணுவரீதியான மோதல்களுடனான போராட் டங்கள் என இரு வகையாக பிரிந்துள்ளது.

1931 ல் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸின் தலை மையில் சட்டசபைத் தேர்தலை பகிஸ்கரித்தது இராணுவ ரீதியான மோதல்களற்ற பலாத்காரமாகும். 1958 ல் நடந்த சத்தியாக்கிரகம், தொடர்ந்து நடந்த சட்ட மறுப் பியக்கம், 1972 ல் நடந்த கறுப்புக் கொடி இயக்கம். 1966 — 1969 வரையான தீண்டாமை ஒழிப்பு போராட் டம், 1987ல் தமிழீழ கோரிக்கையை எடுத்தியம்ப நடை பெற்ற வாக்கு சேர்ப்பு இயக்கம் போன்றவை இரா ணுவரீதியான மோதல்களற்ற பலாத்காரங்களாகும். அவை போரல்ல. 80 ம் ஆண்டுகளில் இராணுவரீதி

யான மோதல்களை பிரதானமாகக் கொண்ட பலாத்காரம் செயல்வடிவம் பெறுகிறது. அதாவது போர் என்ற கட்டத்தை அடைகின்றது. இன்றும் அக்கட்டம் தொடர்கின்றது.

தமிழீழ வரலாற்றை நோக்கும் போது, சிங்கள பேரினவாத அரசுடனான பகைமை முரண்பட்டைத் தீர்ப்பதிலான பலாத்கார வழிவகைகளின் ஒரு உயர்ந்த கட்ட வடிவமே போராகும். இது ஒரு இயல்பான வளர்ச்சி என்பதை இங்கு காணக்கூடியதாய் உள்ளது.

ஆனால் இதில் இருந்து நாம் எங்கும் எப்போதும் பகை முரண்பாடுகளை தீர்ப்பதற்கான வழிவகைகளின் ஒரு உயர்ந்த கட்ட வளர்ச்சி போராகத்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வரமுடியாது. அதாவது இது ஒரு பொதுவிதியல்ல.

கிழக்கு ஜேர்மனியும் மேற்க்கு ஜேர்மனியும் தமது பகைமை முரணபாடுகளை தீர்த்துக்கொண்டு பேர்லின் சுவரை உடைத்தெறிய ஒரு போர் அவசியப்படவில்லை. ஈரானில் ஷா மன்னனின் அமெரிக்கசார்பு இராணுவ கொடுங்கோலாட்சியை தூக்கி எறிய போர் அவசியப்படவில்லை. மக்கள் கிளர்ச்சியே அங்கு அதிஉயர் பலாத்கார வடிவமாக இருந்தது. போல்டிக் குடியரசுகள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்று தனிநாடாவதற்கு ஒரு போர் அவசியப்படவில்லை. தமிழ் நாட்டில் பிராமணியம் மீண்டும் ஆட்சிபீடம் ஏறுவதற்கு ஒரு போர் அவசியப்படவில்லை. இந்த உதாரணங்கள் எல்லாம் விதிவிலக்குகளல்ல. மாறாக, பலாத்கார அரசியலின் தவிர்க்கவொண்ணா தொடர்ச்சியே போர் என்பது உண்மை. ஆனால் பலாத்கார அரசியல் கட்டாயமாக போராகத்தான் தொடரும் என்பது உண்மையல்ல என்பதையே இவ் உதாரணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அது யுத்தமாகத்தான் தொடருமா இல்லையா என்பது அவ் வவ் நாட்டின் ஸ்தூலமான நிலமையைப் பொறுத்த விடயமாகும்.

இலங்கைத் தீவினதும், தெற்காசியப் பிராந்தியத்தினதும் ஸ்தூலமான நிலமைகள் தமிழீழ மக்களின் பலாத்கார போராட்டத்தை ஆயுதப் போராட்டம்(போர்) என்ற கட்டத்திற்கு உயர்த்தி விட்டது.

இதனால் 1980 களின் முற்கூறுகளில் இருந்து போர் தான் தமிழீழத்தின் அரசியலாக மாறிவிட்டது. தமிழீழ போரில் இருந்து விலகியிருக்கும் ஒருவன் தமிழீழ அரசியலில் இருந்தே முற்றாக விலக வேண்டியதான நிலையே இன்று வழமையாய் உள்ளதற்கான காரணம் இதுவேயாகும். மறுபுறத்தில் தமிழீழ அரசியலுடன் தொடர்பு படும் ஒருவன் ஏதோ ஒருவழியில் தமிழீழ போருடனும் தொடர்பு படவேண்டியதன் அவசியம் ஏற்படுவதற்கான சமூக காரணமும் இதுவேயாகும்.

—மாதுங்கன்

## சாளரம் வாசகர் வட்டங்கள்

பாடசாலைகள் தோறும் 'சாளரம் வாசகர் வட்டம், அமைக்கும் செயற் பாடுகளை ஆரம்பித்திருக்கிறோம்.

ஆர்வமுள்ள மாணவர்கள் இதில் இணைந்து கொள்ளவேண்டும் என்பதில் ஆவலாகவுள்ளோம்.

இது சம்மந்தமாக எல்லாப் பாடசாலைகளுக்கும் விஜயம் செய்யவும் எண்ணியுள்ளோம். அதற்கு முன்பாக வாசகர் வட்டத்தில் அங்கத்துவம் பெறவிரும்பும் மாணவர்கள் தங்களின் பெயர் முகவரிகளையும் கல்விபயிலும் பாடசாலை, வகுப்பு போன்ற சகல விபரங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டு எமக்கு கடிதமூலம் விண்ணப்பிக்கவும்.

மாணவர்களின் எழுத்தாற்றலையும், கருத்து ரீதியான சிந்தனைகளையும் வளர்க்கும் விதமாக பல்வேறு செயற் திட்டங்களை வாசகர் வட்டங்கள் மூலமாக செயல் படுத்த 'சாளரம்' திட்டமிட்டுள்ளது.

மனித சமுதாயத்தில் ஆசிரியர் பணி மகத்தானது. ''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' என்பதுபோல ஒரு நல்லாசிரியனுக்கு சில நற் தகைமைகள் உள்ளன. ஆசிரியன் எனப்படுபவர் அனைவரும் உண்மையான ஆசிரிய மனிதத்தை உள்ளீடாக உடையவராகார். இங்கே நாம் காணும் ஆசிரியன் நல்லாசிரிய உள்ளீட்டை உடையவன். அவன் சமூகத்தில் உலா வருகின்ற முக்கிய முனையாகத் திகழ்கின்றான். இவனது ஒவ்வொரு அசைவும், மாணவ கவிப்புடன் திகழ்வதால் ஆசிரியன் மாணவனாகிறான்.

# ஆசிரியன்

ஆசிரியன் மன அடிப்படையிலும் செயலடிப்படையிலும் இளையவனாக புலப்படுகிறான். வெறுமனே அவன் ஒரு சமூகத்துக்கப்பாற்பட்ட பிறவியாக இருக்க முடியாது. மனித சமுதாயம் தோன்றி பரிணாம வளர்ச்சி கண்டு இன்று சர்வதேச அளவில் வளர்ந்துள்ள மட்டம் வரையும் எமது கண்ணோட்டம் செல்லும் போது, ஆசிரியனின் செயற்பாட்டின் காத்திரம் புலப்படும்.

சமுதாயத்தின் எதிர்காலச் சிற்பிகளை செதுக்கி வரும் இம்மனிதம். செயற்பாட்டில் மாணவத்தன்மை வாய்ந்தது சமுதாயத்தின் ஒரு பகுதி மாணவ நிலை அந்நிலை சமுதாயத்தில் காத்திரமாக பொதியுமானால் தான் மனித வாழ்வின் விழுமியத் தடையங்கள் சரியான பகுதியில் இசைவாக்கம் பெறமுடியும்.

இதன்படி மனித வாழ்வின் ஒருகட்டம் மாணவத்துவம். அந்த மாணவத்துவத்தை உருவாக்கினால் தான் எமக்குத் தேவையான நற்சமூகத்தை முகிழ்விக்கலாம். அவ்வாறெனில் மாணவனை உருவாக்கும் ஆசிரியன் முதலில் மாணவனாகிறான். அவ்வாறு மாணவனாகத் தன்னை திரித்துக் கொள்ள முடியுமாயின் அது ஆசிரியத்துவத்தின் வெற்றி, எனவே ஒவ்வொரு ஆசிரியனும் தனது வெற்றியை இலக்காக்கியுள்ளமையால் தன்னை மாணவனாக்கிக் கொள்கிறான்.

''முள்ளை முள்ளால் எடுத்தல்'' என்பதற்கமைய, வகுப்பறையில்வைத்து முதலில் நோக்கும்போது ஆசிரியன் மாணவனாகத்தன்னை மாற்றிக் கொள்கிறான். ஏதும் தெரியாத குழந்தைக்கு ஏதோ தெரிவிக்கவெனச் செல்லும் ஆசிரியன், தனது உள்ளீடுகளையும் பிரயோகிக்க முடியாது.

ஒரு வகுப்புக்குள் நுழையும் ஆசிரியன் தன்னைத் தளரவிட்டு ஒரு மாணவ மன, அறிவு நிலைக்கு உருமாற்றிக் கொண்டு தான் கொண்டு சென்றஅறிவை அம்மாணவனுக்கு வார்த்து விடுகிறான். படிப்படியாக அவன் தன்னைப் பக்குவப்படுத்தும் போது மாணவனையும் தனது திசைக்கு இழுத்து வருகிறான்.

போனபோக்கிலே, ஒன்றுமறியாத பிஞ்சு உள்ளத்தில் ஆசிரியனின் தாக்கம் வெடிப்பையும், பாடத்தில் விரக்தியையும் ஏற்படுத்தி விடுமானால், ஆசிரியன் தான் சார்ந்த தொழிலில் தோல்வியை அறுவடை செய்ய வேண்டி ஏற்படும். அதனால் ஆசிரியன் தன்னை வகுப்பறைக்குள் மாணவனாக்குகிறான்.

ஆசிரியத்துவத்தின் நோக்கு, சரியான சமூக விழுமியங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இளஞ் சந்ததியினரை ஆற்றுப்படுத்துவது ஆகும். ஆசிரியனது அறிவு, திறன், மனப்பாங்கு இங்கு அவசியமாகின்றது.

அறிவு, திறன், மனப்பாங்கை செவ்வனே பெற்றுக் கொள்ளும்போது ஆசிரியன் தன்னை ஒரு மாணவ பக்குவத்துக்கு ஆட்படுத்த முடியும். ஆசிரியன் தொழிற் கல்வியையும், பொதுக்கல்வியையும் செவ்வனே உள்வாங்கு இருப்பானாகில், ஆசிரியத்துவம் முகிழ்த்துவிடுகிறது.

# மாணவனே

ஆசிரியனாக இருப்பவன். தான் பங்களிக்கும், நிறுவனத்துக்குரிய கட்டமைப்பை விரும்பி பற்றிக் கொள்ள வேண்டும். ஆசிரியனாக இருந்த ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள் முதலியோரின் வாழ்க்கையை ஆராயும்போது எம்முள் வியக்குமளவுக்கு அவர்களது செயல்திறன் காணப்படுகின்றது.

ஒருஆசிரியனாக வாழும் மனிதன் தூய இலட்சியங்களை உடையவனாக இருக்கிறான். மாசற்ற நெஞ்சினனாக இருக்கிறான். மாசற்றநெஞ்சு, மாணவனின் நிலை இந்தவகையில் ஆசிரியன் மாணவனாகிறான்.

ஆசிரியன் என்நேரமும் அறிவுப் பசியுடையவனாக இருக்கிறான். மனதுள் எந்நேரமும் ஒருவகைக் கூச்சம் நிலவுகின்ற நிலை ''மாணவன் எனக்குத் தெரியாத எதையும் கேட்டுவிடுவானோ'' என்கின்ற மனப்பீதியில் வாழும் ஒவ்வொரு ஆகிரியனும் நாளாந்தம் கற்றுக் கொண்டே பயிற்சி பெற்றுக் கொண்டே இருக்கிறான்.

சமூக பண்பாடு ஆசிரியனைப் பெரிதும் பாதிக்கின்றது, என்னேரமும் ஆசிரியன் தன்னைச் சமூகம் பார்த்துக் கொண்டே இருக்கின்றது என உனர்கிறான். இதனால் தன்னை மாணவ மயப்படுத்தலில் புதைத்துக் கொள்கிறான்.

## கல்வி

வளர்ந்து விட்டபின்பும் குழந்தையாக உலாவி வரும் ஆசிரியன் கண்ணில் வானத்து நிலவு ஒருகணம் கையில் தவழும் பந்தாகிறது. ஒரு கணம் காதலின் சாட்சியாகிறது ஒரு கணம் கிரகங்கள் பற்றிய கோட்பாட்டின் ஆதாரமாகிறது. இது அவன் பல்வேறுபட்ட மாணவர்களைச் சந்திக்கும் போது அவனது மன நிலையின் ஏற்ற, இறக்கங்களால் ஏற்படும் பார்வைக் கோலங்களாகின்றன.

ஆசிரியன் தனது தொழில் சார் கல்வியின் பொருட்டு கல்விக் கலாச்சாலைக்குப் போகிறான். அங்கே அவன் தன்னை மறந்து மாணவனாக உலா வருகிறான். தன் சகாக்களுடன் கொஞ்சிக் குலாவி மகிழ்கிறான். தன் சமூகப்பணியின் தார்பரியத்தைப் புரிந்து கொண்ட மாணவனாக அவன் செயற்பட்டுக் கொள்கிறான்.

தான் அன்றாடம் பெற்ற அனுபவங்களை தனது மாணவர்களுடன் வகுப்பறையில் புகுந்து மரிமாற்றிக் கொள்ளும், மாணவன் அவன்.

சமூகத்திலுள்ள ஏனைய சேவகர்களுடன் ஒப்பிடும்போது ஆசிரியனின் மாணவத்தன்மை புலப்படுகின்றது. ஒரு பொழுது நோக்குவோமாயின் ஆசிரியன் பல்வேறுபட்ட விளையாட்டுக்களைப் பயிற்றுவிக்கிறான், இவ்வேளை மைதானத்துள் தன்னைஅவன் ஆசிரியனாக புறம்பாக்கிக்கொள்ள முடியாது. அவ்வாறெனில் அது மாணவனுக்கு, புலமைபெறமுடியாத நிலையைத் தோற்றுவிக்கும்.

''கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு'' இம் முதுமொழிக்கமைய கல்வியின் ஊற்றுவாயாகத் திகழும் ஒவ்வொரு ஆசிரியனும் முழுமை பெறாதவனாகவே இருக்கிறான். முழுமைபெறாத சமுதாயக் கூறு எவையும் மாணவ வடிவம் பெற்றவையே, ஆசிரியன் ஓர் சமுதாயக் கூறு அவன் மாணவ வடிவம் பெற்றவனே.

ஆசிரியன் தனது சூழலை மகிழ்வு பொருந்தியதாக வைத்துக் கொள்ள விரும்புகிறான். அதேபோலத் தான் விரும்பாத சூழலில் சேவை செய்ய மறுக்கின்ற தன்மை அவனிடம் காணப்படுகின்றது. இது அவனது மென்மையான உளப்பாங்கை எடுத்துக் காட்டுகின்றது.

தனது நிருவாகத்துக்கு பணிந்து நடத்தல் ஆசிரியனது கடைமையாகிறது. சமுதாயச் சீரளிவு அவனைப் பெரிதும் பாதிக்கிறது. ''நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்'' என்பது பாரதி பாடியது இதற்கமைய சமுதாய நாசத்தை விரும்பாத ஆசிரியன் சமூக சீர்திருத்தங்களை தெருவெல்லாம் பிரசங்கஞ் செய்கிறான். வகுப்பறையில் சமூகக் கூறுகளாக உலவும் தன் மாணவரிடம் கூறுகிறான். நேசம் மிகுந்த சமுதாய சேவகனாக இருப்பவன் என்னாளும் ஆசிரியனே.

சமூகசேவைகளில் எல்லாம் சிறந்தது என இன்றும் உலகம் கூறும் நிலை ஆசிரியநிலையே. விஞ்ஞானம் வளர்ந்து விட்ட மேற்கத்தைய நாடுகளில் கூட சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது என்றால் ஆசிரியனை சமூகம் எந்தளவு எடை போடுகின்றது என்பது வெள்ளிடை மலை. இத்தொகுதியில் ஆசிரிய உள்ளங்களை மாணவ உள்ளங்களாகப் பார்க்க சமூகம், இந்த உலகம் ஒருகணம் விரும்புகிறது இதனால் இப்போது ஆசிரியர்க்கென தினம் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியனாகப் பரிணமிக்கும் ஒருவன் குறிக்கோள் நோக்கமும் கொண்டவனாகிறான். வகுப்பறையில் கற்பித்து பயிற்சி கொடுக்கும் குறிக்கோளால் அவன் சமுதாயத்துக்கு நல்ல மாந்தர்களை உருவாக்கும் நோக்கை நிறைவேற்றிக் கொள்கிறான்.

மனித சமுதாயத்தின் திசை செலுத்திகளாகத் திகழ்பவர்கள் ஆசிரியர் எனப்படுபவர்கள். இவர்கள் சமுதாயத்தை அதன், இலட்சியத்தை, விருப்பு வெறுப்பை, கனவை, ஒளியை, பண்பாட்டை, கோட்பாட்டை நாளாந்தம் கற்றுக்கொள்கிறார்கள். கற்று கற்பிக்கிறார்கள். கற்பித்துக் கற்கிறார்கள்

எனவே தான் ஆசிரியன் மாணவனே என்கின்ற சமூகஎண்ணக் கரு முகிழ்கின்றது.

பெ. கணேசன்
கிளி/வன்னேரிக்குளம், ம. வி.

கிளிநொச்சி மாவட்ட
ஆசிரியர் தின விழாவில்
கட்டுரைப் போட்டியில்
முதலாம் பரிசு பெற்ற
கட்டுரை

# யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்

தமிழர்களின் பூர்வீக வரலாறு மட்டுந்தான் மறைக்கவும் திரிக்கவும் படுகிறது என்று எண்ணக் கூடாது. மிக சமீபகால வரலாறுகள் கூட மறைக்கப் படுகின்றன. நடந்ததொன்றிற்கு அப்படி எதுவுமே நடவாதது மாதிரியான தோற்றமளிக்கப்படுகிறது. சிங்கள பேரினவாதிகளும், சிங்கள பேரினவாத புத்திஜீவிகளும்தான் இவ்விதமாக வரலாற்றை மறைக்கிறார்கள் என்பதில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் அவ்வரசியல் வாதிகளுக்கு காவடி தூக்கும் அறிவியல் நேர்மையற்ற புத்திஜீவிகளும் கூட வரலாற்று மறைப்பிலும், இருட்டடிப்பிலும் ஈடுபடவே செய்கிறார்கள். இவ்விதம் தமிழ் அரசியல் வாதிகளாலேயே மறைக்கப்பட்ட தமிழ் வரலாற்றில் ஒன்றுதான் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸாகும்.

## மறைக்கப்பட்ட வரலாறு

1917, 1918, 1919 ஆகிய வருடங்களில்] யாழ்ப்பாண கல்லூரி உயர்தர மாணவர்கள் தமக்குள் படிப்பு வட்டம் ஒன்றை அமைத்தார்கள். உலக, உள்ளூர் அரசியல் விடயங்கள் தொடர்பாகவும், யாழ்ப்பாணத்தின் சமூக பிரச்சனைகள் தொடர்பாகவும் அடிக்கடி தமக்குள் ஒன்றுகூடி விவாதித்துக் கொள்வார்கள். இந்த படிப்பு வட்டம் படிப்படியாக கல்லூரிக்கு வெளியான ஒரு படிப்பு வட்டமாக வடிவெடுத்தது. பிற பாடசாலை உயாதர வகுப்பு மாணவர்களும் மாணவர்கள் அல்லாத அறிஞர்களும் கூட இப்படிப்பு வட்டத்தில் கலந்து கொண்டார்கள். இதன் வளர்ச்சி யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்றோர் அமைப்பின் உருவாக்கத்தில் முடிவடைந்தது. இது பின் யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸாக பரிணாமம் பெற்றது. மாணவர் காங்கிரஸ் தோற்றம் பெற்றது 1924 ம் ஆண்டிலாகும். பின்னாளில் மானிப்பாய் இந்துகல்லூரி அதிபராக இருந்த திரு. ஹண்டி பேரின்பநாயகமே இதன் தலைமை அமைப்பாளராக இருந்தார்.

இக் காங்கிரஸ் மாணவர்கள், படித்தவர்கள் ஆகியோர் மத்தியில் ஒரு அரசியல் எழுச்சியைத் தோற்றுவிப்பதற்காக வருடாவருடம் மாநாடுகள் நடத்தி வந்வனர். 1924 — 1931 வரை வரலாற்று முக்கியத்துவம் மிக்க எட்டு மாநாடுகளை நடத்தியுள்ளார். இவர்களின் 1 வது மாநாடே சாதிபேதமின்றி கல்வியில் அனைவருக்கும் சமவாய்ப்புகள் வேண்டும் என்றும், தீண்டாமை ஒழிய வேண்டும் என்றும் குரல் கொடுத்தது. தீண்டாமைக்கெதிராக குரல் கொடுத்த 1 வது பொதுஸ்தாபனம் இதுதான் என்பதை இங்கு கவனிக்க வேண்டும். 1927 லேயே ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவினருக்கென்று ஓர் தனியான ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. யாழ்ப்பாண மாணவர் காங்கிரசிற்கும் "ஒடுக்கப்பட்ட ஊழியர் சங்கம்" என்ற இந்த அமைப்புக்கும் இடையே நெருங்கிய நட்பும் இருந்தது. அக் காங்கிரஸின் தலைமைக் குழு உறுப்பினராக ஒரு ஒடுக்கப்பட்ட சாதி அறிஞரும் இருந்தார், என்பது கவனத்துக்குரிய ஒரு விடயமாகும். இந்த சாதனையையும் படைத்த 1 வது ஸ்தாபனம் இதுதான்.

1920 களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்து படித்தவர்கள் சைவம், கிறிஸ்தவம் என்ற அனல், புனல் விவாதங்களில் ஈடுபட்டு தமக்குள் ஒற்றுமை இன்றி இருந்தார்கள். இந்த நிலையை முறியடித்த சாதனை இக்காங்கிரஸிற்கு உரியதாகும். பொது வேலைத் திட்டத்திற்காக கிறிஸ்தவ இந்து இளைஞர்களை ஓரணியில் திரட்டிய பெருமையும் இக் காங்கிரஸையே சாரும். இவ் விடயத்திலும் இதுதான் 1வது ஸ்தாபனமாகவும் இருந்தது.

தாய்மொழிக்கல்வி, பாடசாலைகள் அரசுடமையாக்கப்படல், பாடசாலைகளில் சம ஆசனம், சம போசனம், தேசியபற்றையும் ஆன்மீக விழுமியங்களையும் கொண்ட கல்வித்திட்டங்கள், கல்வியில் முருகியலின் அவசியம், சமூகத்தில் நிலவும் மூடபழக்கவழக்கங்களை ஒழித்தல், மதப்பிரிவுகளிடையே ஐக்கியம், இலங்கைக்கு சுய - ராஜ்யம் என்பனவே இவர்களின் பிரதான கோரிக்கைகளாக இருந்தன.

**வாமணன்**

யாழ்ப்பாண வரலாற்றில் தம்மை சோஷலிசவாதிகள் என்று முதன்முதலாக பகிரங்கமாக அறிவித்தது இக் காங்கிரஸின் தலைவர்களேயாகும். இக் காங்கிரஸின் மாநாட்டு மேடைகளில் இந்திய சுதந்திர போராட்ட தலைவர்கள், இந்திய சுதந்திர ராஜ்ய தலைவர்கள், தென் இலங்கையின் தொழிற் சங்க தலைவர்கள், யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட சாதிமக்களின் போராட்ட தலைவர்கள் ஆகியோரை காண்பது மிகச் சகஜமானதாக இருந்தது.

1931 ம் ஆண்டே இலங்கைக்கு சர்வஜன வாக்கெடுப்பு கிடைத்து விட்டது. அதே ஆண்டில் சட்ட சபைக்கான தேர்தலும் நடைபெற்றது. இலங்கைக்கு

7ஆம் பக்கம் பார்க்க

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா எனக் கூறுவர். ஆனால், அத்தைக்கு மீசை முளைப்பதில்லை. அதற்கான காரணம் என்னவென்று தெரியுமா?

ஒரு குழந்தை பிறந்தவுடன் அது ஆணா அல்லது பெண்ணா என்பதை வெளித்தோற்றத்திலிருந்தே அறிந்து கொள்கிறோம். இந்தவெளித்தோற்றமே ஆணுக்கும் பெண்ணுக்குமுரிய ஆரம்ப கட்ட விசேட அம்சங்கள். இரண்டாவது கட்ட விசேடாம்சம் எனவும் ஒன்று உண்டு. அது பருவ வயதை எய்தும்போது உண்டாகின்றது.

ஒரு குழந்தை பதினொரு வயதின் மேல் பருவ வயதை எய்துகின்றது. இக்காலத்தில் ஆணின் உடலில் 'அன்ட்றோஜீன்ஸ் (Androgens) என்ற உட்சுரப்பியும், ,,பெண்ணின் உடலில் 'எஸ்ட்ரோஜீன்ஸ்' (Estrogens) என்ற உட்சுரப்பி

# அத்தைக்கு ஏன் மீசையில்லை

யும் உற்பத்தியாகின்றன. இவையே ஆணுக்கும் பெண்ணுக்குமுரிய இரண்டாம் கட்ட விசேடம்சங்களை உருவாக்குபவை.

'அன்ட்றோஜீன்ஸ்' என்ற உட்சுரப்பியின் செயற்பாட்டினால் முகத்திலும் மார்பிலும் உரோமம் முளைத்தல், குரல் தடிப்படைதல், உடலில் உரமேறுதல் போன்ற போன்ற மாற்றங்கள் ஏற்படுகின்றன.

'எஸ்ட்றோஜீன்ஸ்' என்ற உட்சுரப்பியின் செயற்பாட்டினால் மார்பக வளர்ச்சி, மாதவிலக்கு, உடலில் மென்மை போன்ற மாற்றங்கள் ஏற்படுகின்றன.

'அன்றோஜீன்ஸ்' என்ற உட்சுரப்பி பெண்களின் உடலில் உற்பத்தியாகாத காரணத்தால் பெண்களுக்கு மீசை முளைப்பதில்லை.

சிவா

## யாழ்ப்பாண..:

(6ஆம் பக்கத் தொடர்)

முழுமையான சுய - ராஜ்யம் கோரி இக்காங்கிரஸ் இத்தேர்தலை பகிஸ்கரிக்கும்படி யாழ்ப்பாண மக்களை அறைகூவியது. தேர்தல் பகிஸ்கரிக்கப்பட்டது. பகிஷ்கிரிப்பு வெற்றியும் கொடுத்தது.

சுமார் 12 வருடங்கள் இக்காங்கிரஸ் யாழ்ப்பாண வரலாற்றின் தலைமை ஸ்தாபனத்தில் இருந்தது. பல ஆழ்ந்த வரலாற்றுத் தாக்கங்களை ஏற்படுத்தியது, இத் தாக்கங்கள் வரலாற்றின் திருப்பு முனைகளாக திகழ்ந்தன.

யாழ்ப்பாணத்தின் கல்விவளர்ச்சிக்கு அளப்பரிய பங்குகளை வகித்துள்ள ஒரு புரட்சிகர ஆசிரியர் பரம்பரையை தோற்றுவித்தது இந்த காங்கிரஸேயாகும். விக்ரோறியா கல்லூரி அதிபராக இருந்த திரு. சிவபாதசுந்தரம், ஸ்ரான்லி சுல்லூரியை ஸ்தாபித்த திரு. கனகரட்ணம், ஸ்கந்தாவின் அதிபராய் இருந்த தி. சுப்பிரமணியம் (Orator), மத்தியகல்லூரி அதிபராக இருந்த திரு, தம்பர், மானிப்பாய் இந்துக் கல்லூரிஅதிபராயிருந்த திரு. ஹண்டி பேரின்பநாயகம், போன்றோர் இவர்களில் சிலராகும். இவர்கள் இக் காங்கிரஸின் முன்னணி உறுப்பினர்களாகும். கிழக்கு மாகாண கல்வி சீர்திருத்த தலைவராக இருந்து 38 பாடசாலைகளை நடத்திய உயர்திரு. விபுலானந்தரும் இக்காங்கிரஸின் தலைமை உறுப்பினர்களில் ஒருவர் என்பதை இங்கு கவனிப்பது அவசியம்.

யாழ்ப்பாண வரலாற்றில் மாத்திரமல்ல இலங்கை வரலாற்றிலேயே 1 வது புரட்சிகர ஸ்தாபனம் இக்காங்கிரஸ்தான். யாழ்ப்பாண அரசியல் வரலாற்றில் மாத்திரமல்ல, கல்வி வரலாற்றிலும் இதுவே புரட்சிகர சமூக உள்ளடக்கம் கொண்ட 1 வது ஸ்தாபனமாகும். இதன் வரலாற்றை மறைக்க வைத்தது யார்? அது ஏன்? யாழ்ப்பண புத்திஜீவிகள் இக்காங்கிரஸை மறந்து போகும் அளவுக்கு நன்றிக்கடன் இல்லாதவர்களாக ஆகிவிட்டார்களா? இன்றைய வரலாறு பற்றியும் அவர்கள் எதிர்காலத்தில் இவ்விதந்தான் நடந்து கொள்வார்களா? இத்தவறுகளுக்கான சமூக வேர்கள் எவை? இவைகள் ஆராயப்பட வேண்டிய கேள்விகள்

நகர்ந்து செல்லமுடியாத, அங்க அசைவுகளினால் தமது எண்ணங்களை வெளிப்படுத்த முடியாத நிலையில் உள்ள தாவரங்கள் பற்றிய புதிய புதிய அறிவியற் கண்டுபிடிப்புகள் வந்து கொண்டேயிருக்கின்றன.

அடர்ந்த காட்டில் தாவரங்கள் ஒவ்வொன்றும் தான் தான் தனித்து நின்று உயிர்வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவே பொதுவாக அனைவரும் எண்ணுகிறோம். அது அப்படியில்லை, காடு என்பது அங்கு வாழும் மரங்கள் எல்லாம் ஒன்றுடன ஒன்று தொடர்புபட்டு, ஒன்றில் ஒன்று தங்கியிருந்து, பின்னிப் பிணைக்கப்பட்ட ஒரு தனி முழுமை என்பது இன்று நிருபிகக்பபட்டு வருகிறது.

காட்டில் வாழும் பல மரங்கள் தனித்த நிலையில் வைத்து வளர்த்தெடுப்பது இன்னமும் முடியாத ஒரு காரியமாகவே இருந்து வருகிறது.

# சார்ந்து வாழல் ஓர் இயற்கை இயல்பு?

காடு ஒரு முழுமை என்பதை தண்டுத் தொகுதியில் வைத்து இனஙகாண்பதிலும் விட வேர்த்தொகுதியில் வைத்தே சுலபமாக இனங்காணப்படுகிறது. சில தாவரத்தின் வேர்கள் மண்ணை இழக்கித் தருகின்றன. சில தாவரத்தின வேர்கள் மண் அழிபபைத் தடுத்து நிறுத்தும் பௌதிக குணாம்சங்களைக் கொண்டதாக அமைகினறன. வீரமரத்தின் வேர் தரைக்கு மேல் தன வோகளாலேயே வரம்பு கட்டுகிறது. சில வேர்கள் மயிறகற்றைத் தொகுதிகளாக அமைந்து மண்ணை இறுகப பறறிக கொள்கினறன. சில வேர்கள் நிலத்தைக் குடைதது கொணடு மிக நீணட ஆழத்திற செலகிறது. இவையே நில அடி நீரை உறிஞ்சி எடுக்கினறன. இவவிதம உறுஞ்சி எடுதத நீரை அநத தாவரம தான மட்டும் பாவககவில்லை. ஆழவேர் இல்லாத தாவரங்களுக்கு வேர் தொகுதி ஊடாகவே அந்த நீரைப் பங்கிட்டுக கொளகிறது. இதற்கு பிரதி உபகாரமாக மண்ணின் மேற்பரப்பில் வோவிடும் தாவரங்கள்ல் இருந்து தனக்குத தேவையான, தனனால் அடி மண்ணில் இருந்து பெறமுடியாத உப்புவகைகளையும் பிற கரைசலகளையும் வேர்த்தொகுதிகள் மூலமே பெற்றுக் கொள்கின்றன. மேல் மண்ணில் இல்லாத அல்லது குறைவாக கிடைக்கின்ற சில கனிய உப்புக்குள் அடிமண்ணில் அதிகம் இருப்பதுவும் உண்டு. மேலதிகமாக உள்ளதை பகிர்ந்து கொள்கிறார்கள்.

இவ்வித பகிர்ந்துண்ணலை சாத்தியப்படுத்துவதற்கான பொறிமுறைகளை மனிதன் படிப்படியாக கண்டு பிடித்து வருகிறான். வேர் தொகுதி ஒன்றுடன் ஒன்று சிக்குண்டு மண்ணின் கீழ் உள்ளனவல்லவா. இவ்விதம் சிக்குப்படும் இடங்களில் ஒரு வித பங்கஸ் வளர்கிறதாம். இப் பங்கசுதான் இந்தப் பகிர்ந்துண்ணலை செயற்படுத்துகிறதாம்.

பங்கசும் ஒருவகைத் தாவரமேயாகும். நிலத்திற்கு மேல் இருக்கும் இராட்சத தாவரங்களின் வாழ்வுக்கு நிலத்திற்கு மேல் இருக்கும் நுண்ணிய பங்கசுகள் உதவுகின்றன.

நிலத்திற் கடியில் உள்ள வளங்களை பங்கிட்டுக் கொள்வதில் அவற்றிடையே உள்ள போட்டியை விட அவற்றிடையே உள்ள ஒத்துழைப்பே அதிகமாகவுள்ளது. இவ்வதமான தொரு ஒத்துழைப்பு இயல்பான தாகயுள்ளது.

தாவரத் தொகுதியிலும் இதே போன்றதோர் ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும காணக் கூடியதாய் உள்ளது. பீடைகளால் அல்லது பங்கசுகளால் தாக்கப்பட்ட தாவரங்கள் உடனே ஏனைய தாவரங்களுக்கு ஒரு எச்சரிக்கை சமிக்ஞையை அனுப்புகிறதாம். ஒருவகை மணமாகவே இந்த சமிக்ஞை அனுப்பப்படுகறது. இந்த சமிக்ஞையை உணர்ந்து கொண்ட ஏனைய தாவரங்கள் உடனே எச்சரிக்கை அடைகின்றன. நோய் எதிர்ப்புத் தன்மையை தம்முள் வரவழைத்துக கொளகின்றன.

ஒளித் தொகுப்பிலும் கூட ஏதோ ஒருவகை ஒத்துழைப்புத் தன்மை நிலவுகிறது என்பதை புரிந்து கொளளக கூடியதாய் உள்ளது. காடுகளில் உயர்ந்து அடர்ந்து வளர்ந்துளள மரத்தின் நிழலின் கீழ் ஏனைய தாவரங்கள் செழிப்பாகவே முளைக்கின்றன. இந்த மர்மத்தையும் நாம விளங்கிக் கொள்ளவேண்டும்.

பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவு மனிதனுக்கு மட்டுந்தான உண்டு, என்று கூறிக கொள்ளும் மனிதன் - உயரியரீதியில் இந்த கூற்று சரிதானா, என்பது கேள்விக் குள்ளாக்கப்பட வேண்டும் - இன்று பகிர்ந்து வாழ்தலுக்குப் பதிலாக பறித்து வாழ்தலிலேயே அக்கறை செலுத்துவது வேதனைக் குரியதே யாகும்.

# ஆசிரியர் கௌரவம்

உலகளாவிய பல தினங்கள்பற்றி நாம் கேள்வியுற்றுள்ளோம். இவ் வருடம் ஒக்டோபர் மாதந்தான் ஆசிரியர் தினம் என்ற ஒன்று பற்றி அனைத்து மாணவர்களும், அனைத்து மக்களும் அறிந்துகொள் ளக்கூடிய வாய்ப்புகள் கிட்டியுள் ளது. இது ஐ. நா சபையால் பிரகட னப்படுத்தப்பட்ட ஒரு தினமாகும்.

வலது குறைந்தோர் வருடம், பெண்கள் தினம், சிறுவர் தினம், சுற்றாடல் பாதுகாப்புத் தினம், மேதினம் போன்ற பல உலகளா விய தினங்கள் உள்ளன. மேதினம் ஐ. நா. சபையால் பிரகடனப்படுத் தப்படாவிட்டாலும் அதுவும் உலக தினமாக அங்கீகரிக்கப்பட்ட ஓர் தினமாகும்.

அடக்கப்பட்டு அல்லது ஒடுக்கப் பட்டு கௌரவம் மறுக்கப்பட்ட நிலையில் உள்ள ஒரு சமூகப் பிரி வினரை கௌரவப் படுத்துவதற் காகவும், அவர்களின் நிலையை உலகின் ஏனைய பகுதியினருக்கு உணர்த்துவதற்காகவும், சம்பந்தப் பட்ட அப்பகுதியினர் தமக்குள் ஒன்றுகூடி தமது நிலையை தாம் புரிந்து கொள்வதற்கான வாய்ப் புகளை ஏற்படுத்திக் கொடுப்ப துமே இவ்வாறான தினங்களின் நோக்கமாகும்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன? ஆசிரியர்களும் ஒடுக்கப்பட்ட, சமூக கௌரவம் மறுக்கப்பட்ட, ஒரு சமூகப்பிரிவி னர் என்றே ஐ நா. மன்றம் கருதுகிறது என்பதேயாகும. இந் தக் கணிப்பீடு சரிதானா?

எமது நாட்டின் மக்களில் பெரும் பான்மையினர் - மாணவர்கள் கூட இன்னமும் இதற்கு எதிரான கருத் துள்ளவர்களாகவே உள்ளனர். இவ்வித கருத்து தோற்றம் பெறு வதற்கு பல சிக்கலான சமூக காரணிகள் உண்டு. ஆசிரியர்களின் நடவடிக்கைகளும் கூட இதற் கான ஒரு காரணங்களில் ஒன் றாகும். ஆசிரியர்களில் பெரும் பான்மையினர் தாம் ஒரு ஒடுககப் பட்ட, சமூக கௌரவம் மறுக்கப் பட்ட சாதிப் பிரிவினர் என்பதை எந்தளவுக்கு புரிந்து கொண்டுள்ள னர் என்பது கேள்விக்குரியதேயா கும்.

ஆசிரியர்கள் என்பவர்கள் உழைப்புப் பிரிவினையின் அடிப் படையில் தனியாக பிரிக்கப்பட் டுள்ள ஒரு சமூக குழுவாகும். முதலில் இவர்கள் கூலி உழைப் பாளர்கள். தமது உழைப்புச் சக்தியை கல்வி நிறுவனங்களுக்கு- அது தனியார் நிறுவனமாக இருக் கலாம் அல்லது அரசாங்க நிறுவ னமாக இருக்கலாம் - விற்பவர்க ளாகும். இவர்களின் உழைப்புச் சக்தி மூளை உழைப்பு வகையைச் சார்ந்தது. ஆகவே இவர்கள் மூளை உழைப்பாளர்கள் என்ற வகையைச் சேர்ந்தவர்களாகும். இம் மூளை உழைப்பாளர்கள் எதை உருவாக்குகிறார்கள்? சமூ கத்திற்கு தேவையான புத்திஜீவி களை உருவாக்குவதில் இவர்க ளும் ஒரு பங்காற்றுகிறார்கள்.

எமது நாட்டில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிரித்தானியர் காலத்திலும் அதற்குப் பிந்திய காலத்திலும் - 1970 கள் வரை சமூகத்திற்கு புத்தி ஜீவிகள் ஏரா ளமானளவில் அவசியப்பட்டார் கள். புத்திஜீவிகளை தோற்றுவிப் பதன் மூலமே மிகப்பெரும்பான் மையான குடும்பங்கள் சமூக மேல் நிலையாக்கம் பெற்றுவந் தன. இதனால் ஆசிரியர்கள் தேவை சமூகத்திற்கு மிக மிக அவசியமானதாய் இருந்தது. அள வுக்கு அதிகமாக அவசியப்பட் டது என்று கூடச் சொல்லலாம்.

1950 கள் வரை சமூகத்தின்மேல் தரத்தினரும் மத்திய தரத்தினரும் மாத்திரமே ஆசிரியர் சேவையை பெற்றுக் கொண்டார்கள். இல வசக் கல்வி முழுநிறைவாக அமு லாக்கப்பட்ட பின்னர்தான் சாதா ரண மக்களும் தமது பிள்ளை களை பாடசாலைகளுக்கு அனுப் பத் தொடங்கினார்கள். 1960 களுக்கு முன்வரை அரசாங்கத் திற்கும் ஏராளமான புத்திஜீவிகள் அவசியப்பட்டார்கள். தனியார் பள்ளிக்கூடங்களும் நிறையவே சம்பாதித்தன. இந்த நிலமை களின் காரணத்தால் ஆசிரியர் களுக்குநிறைய கிராக்கியும், சமூக அந்தஸ்தும் இருந்தது. இவர்கள் கௌரவப் பிரஜைகளாகவே கரு தப்பட்டார்கள். மேல்தட்டு வர்க் கத்தினரின் செல்வாக்கினால், மதிப்பினால் ஆசிரியர்கள் பொரு ளாதார சலுகைகள் உட்பட பல சமூக வரப்பிரசாதங்களைப் பெறக்கூடியதாய் இருந்தது. அர சியல் ரீதியிலும் ஆசிரியர்கள் ஒரு அந்தஸ்துள்ள நிலையிலேயே இருந்தார்கள்.

ஆனால் 70 களில் இருந்து ஆசி ரியரின் சமூக கௌரவம் கிடு கிடு வென சரியத் தொடங்கியது. அவர்கள் அனுபவித்து வந்த சமூக அந்தஸ்து வீழ்ச்சியடைய ஆரம் பித்தது. அவர்கள் அனுபவித்து வந்த பொருளாதார சலுகைகள் உட்பட பல சமூக வரப்பிர சாதங்கள் அருகிவர ஆரம்பித் தன. அரசியல் அந்தஸ்து கிட் டத்தட்ட முற்றாகவே பறிக்கப் பட்டு விட்டது. பாடசாலைக்குள் நன் மதிப்புடன் இருந்து வந்த ஆசிரிய - மாணவ உறவு அசுத்தப் படுத்தப்பட்டது, சில இடங்களில் அது அசிங்கப்படுத்தவும் பட் டது.

ஆசிரியர்கள் 'கல்வி நிர்வாகம், என்ற அதிகாரத்துவ யந்திரத்தின் எடுபிடியாளர் ஆனார்கள். அரசி யல் கட்சிகளினதும் அரசியல் வாதி களினதும் ஏனைத்துக்கு உரிய கையாட்கள் ஆனார்கள். பொரு ளாதார ரீதியில் நலிவடைந்த ஒரு

(11ஆம் பக்கம் பார்க்க)

# பள்ளிககூடங்களில் உடற்கல்வி

சமுதாயத்திற்கு 'பயன்' மிக்க மக்களை உருவாக்குவதே கல்வியின் பிரதான நோக்கமாகும். மாணவர்கள் பயன் மிக்க மக்களாக வளர்வதற்கு அவர்களின் உடல்நலம் பேணி வளர்க்கப்பட வேண்டும். குறிப்பாக உடல் துரிதமாக வளர்ந்து விருத்தி அடையும் குழந்தை கட்டிளமைப் பருவங்களில் உடற்பயிற்சியும் உடற்கல்வியும் மிக அவசியமாகும். இதன் பொருட்டு பள்ளிக்கூடங்களில் உடற் கல்வி மிக அத்தியாவசிய பாடமாக கருதப்படுகிறது.

1920 ஆம் ஆண்டுகளிலிருந்து இது ஒரு கட்டாய பாடமாக கற்பிக்கப்படுகிறது. இப் பாடத்தின் பெயரும் பரப்பளவும் காலத்திற்குக் காலம் மாறியும் விசாலித்தும் வந்துள்ளது. மாணவன் தனது உடல், உடலியற் தொழிற்பாடுகள், தொழிற்பாடுகளின் திறனை விருத்தி செய்தல் தொடர்பான அறிவு, பயிற்சி, பழக்கவழக்கங்களை கற்றுக் கொள்ள இப்பாடம் வசதியளிக்கின்றது. குறிப்பாக மாணவன் தனது:-

1. உடல் நலம் பற்றிய அறிவு
2. உடற் திறன் பற்றிய அறிவும், தன் வல்லமை பற்றிய அனுபவரீதியான மதிப்பீடும்
3. உடலியக்கவியல் தொடர்பான நுட்பங்களை அறிந்திருத்தல், இயக்கத்திறனை வளர்த்தல்
4. உடற்தகுதிக்கு வேண்டிய வலிமை விரைவியக்கம் களைப்படையாமை ஆகியவற்றை விருத்தி செய்தல்
5. அங்க இயக்கங்களோடு சேதன உறுப்புகளான சுவாசப்பைகள், இதயம், நரம்புத் தொகுதி தசை நார்த்தொகுதி முதலியவை இசைந்து இயங்கும் திறனை வளர்த்தல்
6. நியாயம், நேர்மை, விதிகள் முதலியவற்றிற்கு கட்டுப்படுதல் ஏனையவர்களோடு பொருத்தப்பாடு கொள்ளுதல் போன்ற நடத்தைகளைப் பழகுதல்

ஆகியவற்றை விருத்தி செய்வதே இப்பாடத்தின் சிறப்பான நோக்கங்களாகும்.

மேற் கூறிய நோக்கங்களை அடைய பள்ளிக்கூடங்களில்:-

1. அங்கங்களை அசைய வைப்பதற்கான எளிய தேகாப்பியாசங்களை அடங்கி 10 நிமிட உடற் பயிற்சி காலைக் கூடல் வேளையில் தினமும்;
2. உடலியக்கம், தேகாரோக்கியம், சுகாதாரம் பற்றிய விளக்கங்கள் கொடுக்க வாரமொன்றிற்கு இரண்டு பாடவேளைகளும்;
3. ஆண்டுக் கொருமுறை மெய்வல்லுனர் திறனாய்வு இல்ல விளையாட்டுப் போட்டிகளும்;
4. வசதிக் கேற்ப காற்பந்து, கைப்பந்து, எறிபந்து, வலைப்பந்து, கிளித்தட்டு, கிறிக்கெட் பற்மின்ரன் போன்ற பெரு விளையாட்டுக்களும்;

நடைபெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இக் கல்வியை உறுதிப்படுத்துவதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும் போட்டிகள் பல் வேறு மட்டங்களில் நடாத்தப்படுகின்றன. பரிசில்களும் பத்திரங்களும் சான்றாக வழங்கப்படுகின்றன.

பள்ளிக்கூடங்களில் கற்கும் மாணவர் உடல், அங்க, சேதன உறுப்பு உணர்ச்சி ஆகியவற்றில் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்தை கைவிட்டு அதிபர்கள் போட்டிகள் நடாத்துவதிலும் பரிசு, பத்திரம், வழங்குவதிலுமே முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். மாணவர்கள் எல்லோருக்கும் பயிற்சி கொடுப்பதற்கும் பதிலாக தெரிந்தெடுத்து சில மாணவர்களுக்கு மட்டுமே பயிற்சிகள் கொடுத்து போட்டிகளில் பங்கு பற்ற வைக்கிறார்கள். பல நாட்கள் பயிற்சி அளிக்காது மாணவர்கள் தங்கள் திறன்களை விருத்தி செய்ய போதிய அவகாசம் வழங்காது போட்டித்தினங்களுக்கு ஒரு சில நாட்கள் முன்னர் மட்டும் பயிற்சி கொடுக்கிறார்கள். சில பள்ளிக்கூடங்களில் விளையாட்டுப்போட்டி நடைபெறப் போகும் கிழமை காலை, மாலை, மதியவேளைகளிலும் பயிற்சி கொடுக்கிறார்கள். வெறும் பகட்டுக்காக உடற்கல்விக்கென ஒதுக்கப்பட்ட பணத்தை செலவு செய்வதற்காக, பெற்றார், அதிகாரிகள் முதலியோரைத் திருப்திப் படுத்துவதற்காக பல பள்ளிக்கூடங்களில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறுவதைக் காணலாம். அதிபர்கள் பலர் இதை ஒரு ''திடீர்த்திட்டமாகவே'' நடாத்துகிறார்கள் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், விசேட விருந்தினர் யார்? எவ்வாறு அழைப்பது? எப்படி உபசரிப்பது? என்பவற்றில் ஒரு சில நிர்வாகிகள் கவனமாக இருக்கிறார்கள். இவ்வகையான விளையாட்டுகள் எமது பள்ளிக்கூடங்களில் நடைபெறுவது நமது இளம் சந்ததியினரின் உடல் நலத்தை சீரழிப்பதாகவே அமையும்.

உடற் பயிற்சிகள் படிமுறைகளில் வழங்கப்பட வேண்டும். திடீர் பயிற்சிகள் அளித்து போட்டிகள்

நடாத்துவதால் மாணவரின் உடற் தகுதி விருத்தி அடையாது. என்பது உண்மை. எதிர்மாறாக இவ் வகையான நிகழ்ச்சிகளால் மாணவருக்கு தசைநார் தொகுதியில் பலயீனம், இதயத்தில் தாக்கம், சுவாசிப் பதில் திணறல் ஏற்படுவது உண்டு. சில வேளைகளில் இவ்விழைவுகள் உடனடியாகத் தோற்றலாம். அல்லது காலம் சென்றும் தோற்றலாம். எனவே உடலங்கங் களுக்கும் உடற்சேதன உறுப்புகளுக்கும் விபத்துகள் ஏற்படாது மாணவன் ஒவ்வொருவனுக்கும் அவரவர் அங்க சேதன உணர்ச்சித் தகுதிகளுக் கேற்ப பயிற்சி அளித்தல் வேண்டும்.

பயம், வெட்கம், பதற்றம் போன்ற உணர்வு களை நீக்கி துணிவு, தன்னம்பிக்கை சந்தோசம் பெறு தல் போட்டி - பொறாமை நீக்கி இணக்கம் - நட்பு கொள்ளுதல், கள்ளம் - கபடம் தவிர்த்து நேர்மை - நியாயம் வழிநிற்றல், தலைமை, விதிகள் என்பன வற்றை மீறாது பணிதல், சகமாணவரோடு பொருத் தப்பாடு கொள்ளுதல் முதலிய நடத்தைசார் இயல்பு கள் வளர வாய்ப்பு அளிக்க இத்துறைபோல் கல்வி யில் வேறு துறையில்லை என்றே கூறலாம். எனவே தான் உடற்கல்வியில் நாம் இறுதியாக நடாத்தும் போட்டிகளிலும் பார்க்க அப்போட்டிகளை நடாத்த எடுக்கும் தொழிற்பாடுகள் மிக முக்கியமானவை.

வளர்ச்சி அடைந்த அமெரிக்கா, கனடா, அவுஸ்தி ரேலியா ஆகிய நாடுகளில் உடற்கல்வி ஆரம்பவகுப்பு கள் தொடக்கம் உயர்தர வகுப்புகள் வரை கட்டாய பாடமாகவே கற்பிக்கிறார்கள். வெறும் காட்சிக்கா கவோ அல்லது சாட்சிக்காகவோ அங்கு போட்டிகள் நடைபெறுவதில்லை. வருடாந்த இல்ல விளையாட் டுப்போட்டிகளும் அங்கு நடைபெறுவதில்லை. ஆனால் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும் மாணவன் ஒவ்வொருவனும் தனது உயரம், நிறை வயதுக்கேற்ற உடற்தகுதி மெய்வல்லுநர்த்திறன்க ளைக் கொண்டிருக்கவேண்டியது அவசியமாகும். அவ் வாறு குறைந்தபட்ச தகுதி, திறன் கொண்டிருக்காத மாணவருக்கு விசேட கவனம் செலுத்தி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தேவைப்படின் மேலதிகமாக ஒரு வருடம் மீண்டும் படித்து வேண்டிய திறன்களைப் பெற வாய்ப்பும் அளிக்கப்படுகின்றது. அவ்வாறு தகுதி பெறத் தவறும் மாணவருக்கு "பாடசாலையை விட்டு விலகத் தகுதியற்றவர்" என்ற பத்திரமே வழங்கப்படுகிறது. இந்நாடுகளில் உடற் கல்விக்கு கூடிய முக்கியத்துவம் கொடுப்பதை நாம் அவதானிக்கலாம். உடற்கல்வி அங்கு பாடவிதானத்துடன் ஒன்றிணைந்தே உள்ளது. சாதாரண நிகழ்ச்சியாகவே அமைகிறது. மாறாக நமது பள்ளிக்கூடங்களிலில் இந் நிகழ்ச்சிகள் பெரும் விழா வாக அல்லது சடங்காக நடைபெறுகின்றன. இம் மனப்பாங்குகளைப் போக்கி நமது சிறார்களை நன்கு வழிப்படுத்தி அவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுந்த பயிற்சி அளிப்பதே இன்றியமையாத கடமையாகும்.

க. கந்தசாமி
கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## ஆசிரியர்...

(9ஆம் பக்கத் தொடர்)

சமூகப் பிரிவினரானார்கள். மேல திகமாக அனுபவித்து வந்த பொரு ளாதார வருமான மார்க்கங்களை தோட்டம் செய்தல், சிறு சிறுவர்த் தகம், சிறு குடிசைத் தொழில்கள் என்பவற்றை இழந்தார்கள். மேல திக வருமான வாய்ப்பும் அரசியல் செல்வாக்கும் உள்ள சிலஆசிரியர்களு க்கு பெரும்பான்மையான ஆசிரியர் கள் பயந்துவாழும் நிலை தோன்றி யுள்ளது. மாணவ ஆசிரியஉறவிலும் இதுவே இன்று வழமையாகவுள் ளது. பயிற்றப்பட்ட உடல் உழைப் பாளர்கள் ''கௌரவமான'' இந்த மூளை உழைப்பாளர்களிலும் விட குறைந்த வருமானம் உள்ளவர் களாகவே உள்ளார்கள்.

இவ்விதமாக ஒரு ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ள ஆசிரியர்கள் துணிந்து தமது 'கௌரவத்தை' நிலைநாட்டும் 'போரில்' ஈடுபட வேண்டியது மிக அவசியம். இவ் விதமானதோர் அவசியத்தின் வெளிப் பாடுகளையும் நடந்து முடிந்த ஆசிரியர் தினத்தின் போது காணக்கூடியதாய் இருந்தது.

70ம் ஆண்டுகளின் பின்பான இந்நிலமைக்கான அடிப்படை, உலகளாவிய காரணங்களை பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

1) பசுமைப் புரட்சி - விவசாய வர்த்தகம் -

2) மூன்றாவது கைத்தொழில் புரட்சி -

3) முதலாளித்துவ வளர்ச்சி பெற்ற நாடுகளால் அறி முகப்பட்ட நுகர்ச்சியியல் Consmarisim -

இவை ஒவ்வொன்றையும் பற்றி தனித்தனியாக நாம் இனிவரும் இதழ்களில் அவதானிப்போம்.

கல்வி

விபுலானந்தர் கட்டுரை வரிசை

# இன்றைய தமிழன் எது செய்ய வேண்டும்?

இன்றைய தமிழன் எனப்படுபவன் யாவன்? உலக நாகரீகத்தின் உச்சியாக ஐரோப்பிய நாகரீகம் வளர்ந்து நிற்க, ஏற்கனவே வளர்ந்திருந்த தமிழனின் நாகரீகமோ கூனிக் குறுகி உலகின் ஒரு மூலையில் நிற்கும் காலகட்டத்தில் வாழும் தமிழனையே இன்றைய தமிழன் என்று கருதினோம். உயர்திரு விபுலானந்தரும் இதையே கருதினார். அவர் வாழ்ந்த காலத்தில் ஆசிய நாகரீகத்தின் ஒரு பகுதியான சீன, ஜப்பானிய நாகரீகங்கள் மிகப் பின்தங்கி இருந்தன என்பதை இங்கு குறிப்பிடுதல் நலம்.

அவர் காலத்தில் கூடலம்பதியில் கூட்டப்பட்ட முத்தமிழ் விழா தலைமைப் பேருரையில் இன்றைய தமிழன் எது செய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். அவர் கூறினார்.

''காலவோட்டம் விரைந்து ஒடுகின்றது. தமிழர் பழங்காலத்துச் சிறப்பினை மாத்திரம் பறையறைந்து கொண்டிருப்பாரெனின், நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் முற்றிலும் இழந்த நீர்மையராதலுங் (தன்மையினாதலுங்) கூடும்; சென்ற நூற்றாண்டிலே ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் விஞ்ஞான நூல் விருத்தியடைந்து விளங்குகின்றது. அந்த அறிவுச் செல்வத்தை தமிழ்மொழி பெறுவதற்கு ஆவன செய்தல் சிறந்த தமிழ்த் தொண்டாகும்.''

இலண்டன் மாநகரில் உள்ள வேத்தவை (Royal Society) என்னும் அறிஞர் அவை கணித நூலினும், (அறிவு) விஞ்ஞான நூலினும் பெரும் புலமை படைத்த திரு. ராமனுஜம், திரு. சி. வி. இராமன், திரு கிருஷ்ணன் ஆகியோரது புலமையைப் பாராட்டியது. இவர்கள் தமிழ் நாட்டில் பிறந்து தமிழ் நாட்டு கலைக் கழகங்களிலே கல்வி பயின்றவர்களாகும். ''இச் செய்தி கேட்டு நாமெல்லாம் பெரு மகிழ்வடைந்தோம். கணித விஞ்ஞான அறிவு நிரம்பிப் பூவுலகத்துப் பேரறிஞர் குழுவிலே, தலையணியிலிருக்குமாற்றல் தமிழனுக்கு உண்டு என்பதை அறிந்து கொண்டோம்.'' என அவர் ஆற்றிய உரை எதைக் காட்டுகிறது?

அவரே கூறுகிறார்.

''பண்டை நாளில் நமது முன்னோர் சிறப்புற்றிருந்தார் என்று வாளா புராணம் பாடிக் கொண்டிருப்பதனால் உறுபயன் யாதோ அறியோம். அயனாட்டாரோடு கொள்வனவுங் கொடுப்பனவுஞ் செய்யாதொழியிற் செல்வம் நிலைபெறாது. உயிர்க்குறுதி பயக்கும் உண்மை நூல்கள் நம்மிடத்து ஏராளமாகவுள்ளன; உடற்குறுதி பயக்கும் நூல்கள் அவரிடத்திலுள்ளன. நமது உண்மை நூல்களை நாம் கொடுப்பதற்கு முன்னரே அவற்றின் சிறப்பை உணர்ந்து மேநாட்டார் தாமாகவே எடுத்துக் கொண்டனர். அவர் பன்னாள் வருந்திச் செய்த அரிய ஆராய்ச்சியின் பயனாகத்திரட்டி வைத்திருக்கிற எண்ணிறந்தனவாகிய கணித நூல், வான்நூல், ஒளிநூல், ஒலிநூல், மின்னியல்நூல், அனல் நூல், உடல்நூல், மனநூல், சீவநூல் பொருட்டன்மை நூல், இரசாயனநூல், உலகசரித்திரம், பூகோள விவரணம், சிற்பநூல், வர்த்தகநூல் ஆகியனவற்றில் ஒன்றையேனும் நாம் தமிழ்ப் படுத்தவில்லை. என்னே, நம்மேதமையிருந்தவாறு '' ....... ''

பிற நாட்டு கலைகளை தமிழ்ப்படுத்தல் மட்டும் தமிழனின் இன்றைய கடமையென்று அவர் கூறவில்லை. தமிழன் புறப்பொருள் பற்றிய அறிவு எதுவுமே இல்லாதவன் என்பதுவும் உயர்திரு விபுலானந்தர் கருத்தல்ல.

## வாமணன்

அவர் கூறுகிறார் ..... ''நம் முன்னோர் இயல், இசை, நாடக முத்தமிழ் துறைகளை மாத்திரமல்ல; கலைத்துறைகள் வேறு பலவற்றையும் போற்றினார்களென்பதைப் பழைய நூல்களாலறிகின்றோம். சிற்பத் துறையிலும் நம் முன்னோர் நிரம்பிய புலமை படைத்திருந்தார் என்பதற்குத் தென்னிந்தியாவில் உள்ள அழகிய கோயில்களே சான்றுபகர்கின்றன. மருத்துவ நூலிலே அவர் படைத்துள்ள ஆற்றலினைச் சித்த வைத்திய முறை கண்கூடாக காட்டுகின்றது. மரக்கலமமைக்கும் நூலும் வானநூல் பிறவும் முற்றிலும் அழிந்து போகவில்லை. ஆதலினாலே அவைதம்மையெல்லாம் பண்டைப் பெருநிலைக்கு கொண்டு வருதல் வேண்டும்.''

வேறோர் இடத்தில் கூறுகின்றார்...... ''இமயம்முதல் குமரிவரை பரந்துகிடக்கும் பரத கண்டமெனும் பெருநிலப்பரப்பின்அறிவுச்செல்வம் பிளவுபடாத ஒன்றேயாம் என்பதை நாம்மறந்து விடுதல்கூடாது. சாதி சமய வேறுபாடின்றி இந்திய நாட்டுப் பேரறிஞர் கலைத்துறையில் ஆழப்புகுந்து ஆராய்ந்து கண்ட சிறந்த முடிவுகளை

வடமொழியில் எழுதும் பழக்கம் தொன்று தொட்டு இந் நாட்டிலே (பாரதம்) இருந்து வருகிறது. இதனால் வழக்கு மொழிகள் கலைத்துறைகளிலே பெருக்கமடையாது ஒழிந்தன. உதாரணமாகச் சிற்பக் கலையினை எடுத்துக் கொள்வோம். தேவர்கோட்டம், மன்னன் கோயில், மக்களில்லம் என்னுமிவை தம்மையமைக்கும் முறைகளையும் தெய்வச்சிலையுருவங்களை யமைக்கும் கணித நுட்பங்களையும் பண்டைத்தமிழர் நன்குணர்ந் திருந்தனர் என்பதற்கு தமிழ் நாட்டில் உள்ள கோயில்களே சான்று பகர்கின்றன ........... அங்ஙனமாயினும் இக்கலை நுட்பங்களனைத்தினையும் உணர்த்தும் ஆகமநூல்கள் வடமொழியில்தான் உள்ளன. இவை தம்மை வழக்கு மொழியில் பெயர்த்தெழுதுதல் சாலவும் வாய்ப்புடைத்து.''

பண்டைய தமிழன் அன்றைய சூழ்நிலையைப் பொறுத்து கலைத்துறையில் வள்ர்ந்துதான் இருந்தான், பல விடயங்களில் முன்னிலையிலும் திகழ்ந்தான். கலைத்துறை வளர்ச்சிக்கான உள்ளாற்றலைப் பெற்றுத்தான் இருந்தான். ஆனாலும், இன்று அவனின் வளர்ச்சி தேங்கிவிட்டது. மிக அதிக தூரம் பின்தங்கி விட்டான். இந்த நிலையை எண்ணி உயர்திரு விபுலானந்தர் மிகவும் வேதனையுற்றார். தமது வேதனையை வெளிக்காட்டுவதுடன் அவர் திருப்திப்பட்டு சும்மாயிருந்து விடவில்லை. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்காக, தமிழனின் அறிவு வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். பிறரையும் துணிந்து செயற்பட வரும்படி அறைகூவல் விடுத்தார்.

''மேற்றிசைச் செல்வம்' என்னும் தனது நூலின் 2 வது அத்தியாயத்தில் அவர் கூறுகிறார்; 'நமது நாகரீகத்தில் ஈடுபட்ட மேனாட்டு அறிவுடையோர் சிலர் நமது முன்னோருடைய பெருமையைப் பெருகக் கூறிப் பின்னோராகிய எம்மை இழிவு படுத்துவர். இனி நாமே நமது முன்னோருடைய பெருமையைப் பற்றி வாய்பறையறைய வெளிப்படுமிடத்து அச்செயல் அன்னியர்க்கு நகையை விளைக்குமன்றி நம்பால் மதிப் புண்டாக்காது. என்னை, ஆண்மை குன்றி வறுமையடைந்திருக்கின்ற வறியன் ஒருவன் செல்வர் பாற் சென்று தம்முன்னோர் பெயரைச் சொல்லியிரக்கின்ற செய்கையை இழிதொழிலாக உலகம் மதிக்கும் ஆதலின், பின்னர் செய்யவேண்டுவதென்ன? நம்முடைய சிறுமைக்கெல்லாம் காரணமாயிருக்கிற பொறாமையையும் பிரிவினையையும் ஒருங்கே களைந்து விட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் தேச சேவைக்கே ஒப்புக்கொடுத்து நமது தேசத்தையும் மொழியையும் பெருக்கமுறப் பண்ணுவோமாயின் நாமும் பெருமையடைவோம்; நம் முன்னோரும் பெருமையடைவர்.''

மேற்றிசை செல்வத்துக்கான முன்னுரையில் மேலும் கூறுகிறார்.

''இக்காலத்தில் புறப்பொருள் ஆராய்ச்சியே குறைந்து போயிற்று ......... யாக்கையும் (உடலும் செல்வமும் இளமையும் நிலையா என்று அழுகிற அழகையே தமிழ் வாணருக்கு (தமிழ் அறிஞர்க்கு) இயல்பாயிற்று. நிலையாப் பொருள்களை விடுவாரோ. மிகச் சிலர், அவற்றைப் பற்றியணைத்துக் கொண்டு தேடித் துய்ப்பதற்கு (அனுபவிப்பதற்கு) வழியின்மையால் ''நிலையா நிலையா'' என்று பொய்க்காஞ்சி பாடி யிம்மை மறுமைச் சுகத்தையிழப்பவரே மிகப் பலர். இனிப்பாடாண்டிணையை பாடாது (போற்றிப் பாடவேண்டியவனை) ஆண்மையில்லா அசுரர்களுக்குப் பாட்டிசைத்து அவர் தலைக்கடையிற் காத்திருந்து வன்சொற்களையே பரிசிலாகப் பெற்று மீழ்கிற தமிழ் வாணர் பலர்.

கவிநயவிலிமையையும், பிறலினிமையையும் தருகிற அகப்பொருணற வினையுண்டு மதுவுண்டு மயங்கிய வண்டைப் போல செயலின்றிக் கிடந்தோம்; அடிமைத் தன்மையும் வந்தெய்திற்று. ஐயோ. இந்நிலமையினி வேண்டாம் வீரத்தையும் ஆண்மையையும் தருகிற புறப்பொருளை நாடுவோம். தவராஜசிங்கமாகிய விவேகானந்த சுவாமி சொல்கிறார்;

''எழுந்திருங்கள், சோம்பலையும் மூடத்தனத்தையும் வீசியெறிந்துவிட்டு வெளியே உலாவி உலகத்தின் ஏனைய பாகங்களில் உள்ள மாந்தர்கள் முன்னேற்றமடைந்து கொண்டு போவதைப் பாருங்கள். எத்தனை நாளைக்கு மூலையில் ஒதுங்கிக் கிடக்கப் போகிறீர்கள். நீங்கள் சுத்தவீரர்களின் வழிப்பிறந்தவர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? சூரனுக்கு - உயிர் துரும்பு; தேச முன்னேற்றத்துக்காக உயிரையும் கொடுக்கத் தயாராகயிருக்கும் வாலிபர்கள் ஆயிரக்கணக்கான பேர் முன்வரவேண்டும். மேனிலையையடைவதற்கு முயலுவோம், அம் முயற்ச்சியில் உயிர் போனாலும் போகட்டும்.''

புறப்பொருளின் அவசியத்தைப் பற்றி இவ்வளவு அழுத்தமாக வலியுறுத்தும் உயர்திரு விபுலானந்தர் ஒரு துறவி என்பதை இங்கு நினைவுபடுத்தல் அவசியம். உலக இன்பத்தை புறப்பொருள் இன்பத்தை தமிழனுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக அவர் தன்னையே அர்ப்பணித்தார். இதற்காக அவர் தனது சொந்த உலக இன்பத்தை தியாகம் செய்தார்; அவர் உலக இன்பத்தை புறக்கணிக்கவில்லை. புறவாழ்க்கையின் அவசியத்தை உணர்ந்த அவர் தீர்க்கதரிசனமாக அன்றே கூறிய கீழ்க்கண்ட வார்த்தைகள் இன்றுதான் ஈழத்தில் உணரப்பட்டுள்ளது.

''நாம் அறிந்த வரையிற்றமிழ் நாட்டாரனைவரும் சாதிமத மேதமில்லாது கைக்கொள்ளத்தக்க நூல் ஒன்று உளது. அது புறநானூறு.'' இதுமாத்திரமல்ல,

—15ஆம் பக்கம் பார்க்க

கடந்த அக்டோபர் மாதம் 16 ம் திகதி வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாள். இது இந்தியாவில் வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

18 ம் நூற்றாண்டு பறங்கியர் கூட்டம் தமிழகத்தின் மீது படையெடுத்தது. வணிகரீதியாக இந்தியாவிற்குள் நுழைந்த இக்கூட்டம் அப்போது தமிழகத்தை ஆண்ட ஆற்காடு நவாப்பிற்கு கடன் கொடுத்து நாட்டை அடகுப் பொருளாகப்பெற்றது.

# மானம் காத்த மன்னன்

## வீரபாண்டிய கட்டபொம்மன்

ஆங்கிலேயர் தமிழகத்துள் நுழைந்த காலத்தில் வேங்கடத்திற்குத் தெறகேயுள்ள தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி இலலை. தமிழகத்தின ஒரு பகுதியில் நாயக்கர் மன்னர் ஆட்சி; பிறிதொரு பகுதியில் மராத்தியர் ஆட்சி; அத்தனை பேர் மீதும் ஆற்காடு நவாப் ஆதிக்கம, அந்த ஆதிக்கத்தின் மீதும ஆதிக்கம் செலுத்த வந்தது ஆங்கிலேய வணிகக்கூட்டம். அந்தக் கூட்டத்திற்கும் போட்டியாகப் புகுந்தன, டச்சு பிரெஞ்சு வணிகக கூட்டங்கள்.

இவ்வாறு 18 ம் நூற்றாண்டில் விஜயநகர - மராத்திய - மொகலாய- ஆங்கிலேய - டச்சு - பிரெஞ்சு ஏகாதுபத்தியக கூட்டங்களின் வேட்டைக்காடாக தமிழகம் வளங்கியது.

வீரபாண்டிய கட்ட பொம்மன் பாஞ்சாலங் குறிச்சியின் மனனனாக முடிசூட்டிக் கொணட காலத்தில் மொகலாய வல்லரசின இறுதிச்சின்னமாக விளங்கிய ஆறகாடு நவாப் இந்த பாஞ்சாலஙகுறிச்சி பாளையத்தின மீதும மேலாதிக்கம் பெற்றிருந்தான். பின்னர் அந்த மேலாதிககதததையும் கிழக்கநதிய ஆங்கில நிறுவனததிற்கு சொறப பணத்திற்காக அடகு வைத்துவிட்டான. அந்த அடகுப் பொருளைத் தம்முடைய தாக்கிக்கொணடது ஆங்கில வணிககூட்டம்.

வீரபாண்டிய கட்டப்பொம்மன், ஆற்காடு நவாப் அவன் மீது ஆதிக்கம் பெறறிருந்த ஆங்கில நிறுவனத்தினர் இருசாராருக்குமே கப்பம் செலுத்த மறுத்தான். இந்த கிழக்கிந்திய நிறுவனத்திற்கெதிராக போர் முரசு கொட்டினான கட்டப்பொம்மன். இதுவே இந்திய சரித்திரத்தில் மாவீரன் கட்டபொம்மனுக்குள தனிச்சிறப்பாகும். பாரதமே ஆங்கிலேயருக்கு பணிந்து போன காலத்தில் ஒருவன் கட்டபொம்மன் மட்டும் பணிய மறுத்தான். அதனாலேயே அவன் வரலாற்றுச் சிறப்பெய்தியுள்ளான்.

வெள்ளையர் ஆற்றலின் முன்னே இறுதியில் கட்டபொம்மன் வீழ்ச்சியுறக் காரணமாக அமைந்தது வீரமின்மையன்று. சகோதரப்பாளையக் காரர்கள் செய்த துரோகம்! மறவர் வழிப்பட்ட பாளைபங்கள் - கம்பளத்தார் வழிப்பட்ட பாளையங்கள் என்ற இரு பிரிவினரிடையே நிலைத்திருந்த பாரம்பரிய வேற்றுமை இதற்குக்காரணம். குடிமக்களிடையே அரசியல் ஆர்வமின்மை நிலவியதும் இன்னொரு காரணம் எனலாம் இதற்கெல்லாம் மேலாக ஆங்கிலேயரிடம் பீரங்கிகள், துப்பாக்கிகள் போன்ற நவீன கருவிகள் இருந்தன. இக்காரணங்களால் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையம் பறங்கியர் தாக்குதலில் வீழ்ச்சியுற்றது. அன்று எட்டயபுரம் சமஸ்தானம் கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுக்கவில்லையானால் தமிழகத்தின் சரித்திரம் வேறு திக்கில் திரும்பியிருக்கும்.

தமிழகத்தின் வரலாற்றில் வடவாரியரை வென்ற சேகரன் செங்குட்டுவன். தமிழர் சாம்ராச்சியம் கண்ட இராஜ ராஜ சோழன் ஆகிய இரு பெரும் தமிழ் வேந்தர்களையடுத்து மூன்றாவது சிறப்பிடத்தை கட்டப்பொம்மன் பெறுகிறான்.

ஆங்கிலேயர் கட்டப்பொம்மனிடம் கேட்டது ஆண்டுக்கொரு முறை வரிப்பணம் மட்டுமே! அரசுரிமை அல்ல. ''ஆண்டுதோறும் வரிப்பணம் கூட வேண்டாம் எங்கள் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக ஒரு முறை சொறப பணம் கொடுத்தால் போதும்'' என்று கூட ஆங்கிலேயர் கேட்டுப் பார்த்தனர் அதற்குக்கூட கட்டபொம்மன் இணங்கவில்லை.

சிபி

அவமானத்திலிருந்து தமிழகத்தை அப்போது மீட்ட வீரத்தலைவனாக கட்ட பொம்பன் திகழ்கிறான்.

கட்டபொம்மன் காலத்தில் அங்கு அரசியல் கட்சிகள் எதுவும் கிடையாது. எனவே எந்தவொரு அரசியல் வாதியும் கட்டப்பொம்மனை சொந்தம் கொண்டாட முடியாது. ஆனால் சுதந்திர உணர்வுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் கட்டப்பொம்மன் சொந்தமானவன்.

உசாத்துனை
சிந்தனை அலைகள்,

குட்டிக்கதை · உருத்திரா

# எல்லைச் சண்டை

குமரப்பரும் கந்தப்பரும் அயல் வீட்டவர்கள். குமரப்பர் இறந்து சில வருடங்களாகி விட்டன.

குமரப்பர் இறந்த பின் அவருடைய வீட்டுக்குக் கந்தப்பர் வீட்டார் நல்ல உதவி.

கந்தப்பர் செய்யும் உதவி சுயநலத்தோடு கூடியது. இரு வீடுகளுக்குமிடையிலுள்ள வேலியை வருடா வருடம் குமரப்பரின் காணிக்குள் நகர்த்திக் கொண்டு வரும் மண்கொள்ளையை மறைக்கவே இந்த உதவி,


குமரப்பரின் ஆண்பிள்ளைகள் இருவரும் வயதில் சிறியவர்கள் என்றாலும் நடப்பது என்ன என்பதைப் புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்குப் 'பெரியவர்கள்'!

''கந்தப்பர் காணி பிடிக்கிறார்'' என்று இவர்கள் சினத்துக் கிளம்பிய போதெல்லாம் தாயார் தடுத்தார்.

''வேலி அரக்கிறது உண்மைதான். ஆனால், அந்தரம் ஆபத்துக்கு உதவிற ஆக்களோடை சண்டை பிடிக்காமல் சமாதானமாகக் கதைச்சுத் தீர்ப்பம்'.

சமாதானமாகப் பலதடவைகள் பேசியாயிற்று. இனிமேல் எல்லாம் சரியாக நடக்கும் என்ற உறுதி மொழியும் தந்தாயிற்று.

ஆனால், மண்கொள்ளை தொடர்கிறது. நடுவேலியில் நின்ற வேப்பமரம் இப்போது கந்தப்பரின் காணிக்குள்.



'பெடியளால்' பொறுக்க முடியவில்லை. தாய் தடுக்கவும் கேளாமல் புறப்பட்டார்கள். ஒருவனிடம் கத்தி மற்றவனிடம் கோடரி.

வேலி முற்றாக வெட்டி வீழ்த்தப் பட்டது. கந்தப்பர் 'துள்ளிக்கொண்டு' வந்தார்.

'பெடியள் விளக்கமாகச் சொன்னார்கள்.

''ஐயாவையும் அம்மாவையும் ஏமாத்திக் காணிபிடிச்ச மாதிரி எங்களை ஏமாத்த விடமாட்டம் சமாதானமாக இரண்டு காணியளையும் அளந்து எல்லை வைக்கிறதுக்கு நாங்கள் தயார். இல்லையெண்டால் எங்கடை காணியை எங்கடை உறுதிப்படி அளந்து வேலி அடைக்கப்போறம்.''

கந்தப்பர் சத்தம் போட்டுப் பார்த்தார். 'பெடியள்' மசியவில்லை. திரும்பிப் போய் விட்டார்.

# குறள் வெள்ளம்



## காலம் நேரம்

ஆந்தை காகத்தை விட வலியதாக இருக்கலாம். ஆனால்அதன் பலம் இரவிலே தான் பலிக்கும். பகலிலே தருணம் பார்த்து கூகையைக் காகம் கொன்றுவிடும்.

இந்த இயற்கை தரும் பாடம் தான் என்ன? பகையினை வெல்லப் புறப்படுபவர்களுக்கு காலம் மிக முக்கியமாகின்றது. தனது ஆற்றலையும் பகையினது தன்மையையும் ஆராய்கின்றவர்கள் வெற்றிக்கு வாய்ப்பான காலத்தையும் காத்திருப்பர்.

இரவு, பகல், நிலவு, இருட்டு, மாரி, கோடை என்றெல்லாம் காலத்தின் தன்மைகளையும் அதனால் பகைவருக்குள்ள இடைஞ்சல்களையும் ஆராய்ந்து செயற்பட்டால் பகைவர் பலம் இழப்பர்.

இங்கே பகை (அகல்) வெல்ல காலம் கை கொடுக்கிறது.

*''பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது.''*

*- 0481*

அம்பிகைபாகன், (காலமறிதல்)

# இன்றைய தமிழன்...

(13ஆம் பக்கத் தொடர்)


வேறோர் இடத்தில் கூறுவதைக் கேளுங்கள். நமது நாட்டில் கற்று வல்லோரென்றிருப்போர் தாமும் புறநானூற்றினைப் படிப்பதில்லை. நேற்றும் இன்றும் வெளிவந்த பிழைபொதிந்த, சீர்கெட்ட நாவல்களே நமது சிறுவர் செவிக்கு உணவாகின்றன. வீரகாவியங்களைக் கற்றால் உள்ளம் வீரத்தன்மையையடையும்; ஆதலால் மேற்றிசையோர் தமது சிறுவருக்கு ஈலியமகா காவியம், லத்தீன் மொழியில் சீசர் என்னும் சக்கரவர்த்தி யெழுதிய காலதேய யுத்தம் (Gallic war) என்னும் நூல்களை கற்பித்து வைப்பர்.''

''புறநானூறைப்பற்றி விளம்பரப்படுத்துகிறோம்; புகழ்பாடுகிறோம்; ஆனால் அதைப் படித்திலோம்; சராசரி வாசகர்கள் கற்று உணரும் தரத்திற்கு அது இன்னமும் உரைநடைப் படுத்தப்படவோ, பொழிப்புரை செய்யப்படவோ இல்லை.''

செய்வோமா? வெல்வோமா?

இனி, தமிழ் மொழிபற்றி உயர்திரு விபுலானந்தரின் கருத்துக்குள் உட்புகுவோம்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-4



## இடமிருந்து வலம்

(1) அனைவருக்கும் உழைப்பு உண்டு, உழைப்பிற் கேற்ப ஊதியம் என்ற சமூக பொருளாதார நியதியை அடிப்படையாக கொண்ட கோட்பாடு.

(2) சிறுபிள்ளைகளின் எழுதுகோல், மலைப்பகுதி களில் பாரந்தூக்கி.

(3) கிணற்றுத் தவளைகளின் சென்மவிரோதி.

(4) பூச்சி நாசினிகளால் உண்டாகும் நோய் இத் தன்மை கொண்டதாயும் மாறுகிறது.

(5) விளையாட்டு மாணவர்களின் உடல், உள இறுக்க நிலையின் இதுவாக அமைகின்றது.

(9) ஜேர்மனியர்களால் அடக்கப்பட்டு அகதி முகாம் களில் அடைக்கப்பட்ட இவர்கள் இன்று பாலஸ் தீனியர்களை அடக்கி அகதிளாக்கி வருகிறார் கள.

(11) பூச்சி நாசினிகளும், களைக் கொல்லிகளும் பரம் பரையைத் தோற்றுவிக்கும் இவ் இணையத்தைப் பாதித்துபரம்பரையையே நோய்க்காரராக்குகின் றன. வலமிருந்து இடமாக நிற்கிறது.

(12) இதற்குப் பயந்தாலும் மனிதனால் வாழ முடி யாது. இதை பகைத்துக் கொண்டாலும் மனி தனால் வாழமுடியாது.

(12) வேலோன் ஔவையாரிடம் கொடியது எது, அரியது எது என்று பலவிதமான கேள்விகளைக்கேட்டான். அதில்இதுவும் ஒன்று. வலம் இடமாக நிற்கிறது.

(13) 'விழலுக்கு நீர்ப் பாய்ச்சல்' போல் இதைக் குத்தி கைசலித்தல் என்றோர் பழமொழியும் உண்டு.

(15) பொய் பேசுவது இல்லை என்று துணிந் தவன் மாத்திரமே இவனிடம் செல்ல முடியும்.

(16) ஒரு அரசாங்க பரீட்சையின் முன்னெ ழுத்துகள குழம்பிப் போய் இருக்கின் றன.

(17) இந்த விடுமுறைஇரண்டு நாட்கள்தான. வலமிருந்து இ ட ம ா க எழுத்துக்கள் குழம்பி நிற்கின றன.

18) பிடிக்காத சுவையானாலும் அறுசுவையில் ஒன்று.

(20) மனதை இவ்விதமாகவிட்டால் எதுவுமே செய்ய முடியாது.

(22) மும்மணிகளில் இவரும் ஒருவர். வலம் இட மாக நிற்கிறது.

(23) ஏழு நிறங்களை அள்ளி வீசுவான் ஆனாலும் சாதாரண வேளையில் அவை வெள்ளை நிறமே, வலமிருந்து இடமாக உள்ளான்.

## மேலிருந்து கீழ்

(1) சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட இந்த காலப்பகுதியில் போரியல் கல்வியும் ஒரு பாடத்திட்டமாக இருந்துள்ளது.

(6) இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டினார் என்ற காரணத்திற்காக இந்த முதியவர் நஞ் சூட்டிக் கொலை செய்யப்பட்டார்.

(7) உடலில் உள்ள சுரப்பிகளின் ஒழுங்கான செயற் பாட்டிற்கு இவ் உப்புகள் அவசியம். நெடிலாக இருக்க வேண்டிய முன்னெழுத்து குறிலாக நிற் கிறது.

(8) சாதாரண காலத்தில் வசதி படைத்தவர்களின் பானமாக இருக்கும் இது. இன்றைய பொருளாதாரத்தடை நிலையில் சாதாரணபான மாக முயற்சிக்கின்றது. கீழிருந்து மேலாக நிற்கின்றது.

(10) இயற்கையை ஆளும் வல்லமையுள்ளவனாகக் கருதப்படும் இந்த ஜீவராசி இன்று தன்னைத் தானே (பண்மையில்) வல்லமை இழந்து தவிக்கிறான்.

(11) இந்த வளம் இல்லையானால் இசையே வளர்ந்திருக்க மாட்டாது.

(14) இதன் நடுவே நீட்டோலை வாசிக்கமுடியாமல் குறிப்பறிய முடியாமல் நிற்பவன் மரத்திற்கு ஒப்பானவன்.

(16) விபுலானந்தர் இவ்வகையைச் சார்ந்தவர். ஒரு எழுத்து எங்கோ தவறிவிட்டது.

(18) கல்வித் திட்டத்தில் இந்த நெறி நன்றாக இருந்தாற்தான் தேசப்பற்றும், சமூகப்பற்றும் உள்ள மாணவர்கள் உருவாவார்கள். கீழ் இருந்து மேலாக எழுத்துக்கள் குழம்பி நிற்கின்றன.

(21) இது இல்லானை இல்லாளும் விரும்பாள் என ஔவையார் கூறுகிறார்.

(22) சாளரத்தில் இவ் வெள்ளம் ஓடத் தொடங்கியிருந்தாலும் மாதமொருமுறை வெள்ளத்தில் வருவது ஒரு துளியேயாகும்.

(23) அடக்கு முறைக்கு எதிரான போராளிகளை 'பயங்கரவாதி' என சித்தரிப்பது இன்றைய பண்பாடு மாத்திரமல்ல. இவன் காலத்திலும் இது நடை பெற்றுள்ளது. இவன் பெயரால் நடந்த போரில் இவன் தோற்கிறானாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 3க்கான விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பெ | ரு | ந் | த | ன் | மை | X | 16 அ | ர | 18 வ |
| று | X | X | X | ய | 12 இ | 13 ரா | ணு | வ | ம் |
| 2 பே | ரி | 6 கை | X | வி | X | ம | X | X | சா |
| று | X | ப் | X | 8 ஓ | 11 சோ | ன் | X | ரி | 19 வ |
| 3 க | த | பொ | X | X | டி | X | X | X | ளி |
| ள் | X | ம் | அ | 9 மா | X | 14 பை | X | ன் | X |
| X | 5 தீ | மை | X | டு | 10 பா | ப் | மை | ரு | 20 ஓ |
| X | ட் | X | 7 பு | X | ளி | X | X | ட | X |
| 4 அ | ட | ர் | த் | தி | X | 15 கி | ர | 17 க | ம் |

பரிசு பெறுபவர்:- சு. சுரேந்திரஜித், ஆண்டு 12
பளை ம. வித்தியாலயம் புலோப்பளை வீதி, பளை.

## ஹிட்லர் ஓராண்டுக்கு முன்னரே இறந்திருந்தால்....

1944 ம் ஆண்டு ஜூலை 20ம் திகதி சர்வாதிகாரி 'அடோல்ட்ஹிட்லர்' ரஸ்டேன்பேர் தலைமையகத்தில் தனது உயர் அதிகாரிகளுடன் யுத்தம் பற்றிய ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறார். அப்பொழுது குண்டு ஒன்று பலத்த சத்தத்துடன் வெடிக்கிறது. அதிகாரிகள் பதறியடித்து ஓடுகிறார்கள். ஹிட்லர் சிறு காயங்களுடன் தப்பிவிடுகிறார். குண்டு வைத்த ஜேர்மன் நாட்டு இராணுவ அதிகாரி கேணல் 'ஸ்டபன் பேர்க்' பெர்சினுக்குத் தப்பிச் சென்று விடுகிறார்.

இருந்தும், ஹிட்லரின் துருப்பு ஸ்டபன்பேர்க்கையும் அவரது மூன்று சகாக்களான 'ரல்பிரிட்டிச் ஓல்பிசச்சட்; கேணல் மோட்ஸ் வொன் கேர்ஸ்ஹிம், லெப்பினன்ட் லுட்விக்பெக் ஆகியோரையும் பென்ட்லர் ஸ்ட்டாஸ்லேம் என்னும் இடத்தில் வைத்து கைது செய்தனர். (இந்த இடம் மேற்கு பேர்லினில் உண்டு) பின் அவ்விடத்தில் வைத்தே நான்குபேரும் ஹிட்லரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந் நால்வரின் முயற்சி அன்று வெற்றி பெற்றிருந்தால் 2 ம் உலக மகாயுத்தம் ஓராண்டு காலத்துக்கு முன்னரே முடிந்திருக்கும் இலட்சக் கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் என்று இன்று நம்பப்படுகிறது. குண்டு வைத்த அதிகாரியின் நினைவாக நால்வர் சுடப்பட்ட இடம் "ஸ்டபன் பேர்கஸ்ட்ராலே" என்று அழைக்கப்படுகிறது. அந்த நான்கு இராணுவ அதிகாரிகளும் தேசிய வீரர்களாக கிழக்கு மற்றும் ஜேர்மன் அரசுகளால் கௌரவிக்கப்பட்டனர்.

தொகுப்பு- நவரெத்தினம் நடனவடிவேல்

# கலைந்துகொண்டிருக்கும் தூரத்துக் கனவுகள்!

போரினால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இழப்புகள் இன்னல்கள், துன்பங்கள் என்பனவற்றை யெல்லாம் எதிர்கொண்டு இந்த மண்ணில் வாழும்மக்களின் தினசரி வாழ்க்கை எப்படியோ இயங்கிக்கொண்டு தானிருக்கிறது.

இவற்றுடன் இணைந்த பொருளாதாரத் தடையினால் மக்கள் பசி, பட்டினிக்கு முகம் கொடுத்து வந்தாலும், நம்பிக்கை முற்றாகத்தீர்ந்துபோய், விரக்தியின் விளிம்பிற்கு அவர்கள் இன்னும் போய்விடவில்லை.

நம்பிக்கை என்கிற துடுப்பை மட்டுமே கையிலேந்தி வாழ்க்கைப்படகினை கடும் புயலுக்கும், சூறாவளிக்குமிடையே நகர்த்திச் செல்கின்றனர்.

வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழீழத்தவர்களின் நிலையும் மோசமானதோர் மாற்றத்தினை இப்போது அடைந்து வருகின்றமை அங்கிருந்து வரும் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

கடன்பட்டு, காணி நிலங்களை விற்று, கண்களில் வண்ண வண்ணக் கனவுகளை சுமந்து சென்றோரின் இதயங்கள் இன்று போர்க்களமாக, பாலைவனமாக, விரக்தியின் விளைநிலமாக மாறிக்கொண்டிருக்கின்றன.

பொருளாதாரம் வாழ்விற்கு அடிப்படையானது என்றாலும் தனியே பொருளாதாரம் மட்டும் வாழ்வினை தீர்மானிப்பதில்லை என்பதை இப்போதுதான் அவர்கள் உணரத் தொடங்குகின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் பல இளைஞர்,யுவதிகள் தங்கள் வீடுகளுக்குப் பணத்தைமட்டுமே அனுப்பி வருகின்றனர். தங்களின் பரிதாப நிலையினை, துயரக் கதையினை அவர்கள் கடிதங்களில் எழுதுவது இல்லை.

துறைசார் கல்வியைக்கற்று வெளிநாடுகளுக்குச்சென்று உத்தியோகம் புரியும் நமது இளைஞர், யுவதிகளின் தொகை மிகக்குறைவானதே!

இனப்பிரச்சினையை துணையாகக் கொண்டு அகதிகள் என்கிற போர்வையில் சென்று தொழிற்சாலைகளிலும், வேறு இடங்களிலும் அகப்பட்ட தொழில்களை செய்து இயந்திரவாழ்க்கை நடாத்தும் தொகையினரே அதிகம்.

கனடா என்றால் ஏதோ சொர்க்கலோகம் என்பது போல் சிலர் கதைப்பதை கேள்விப்பட்டிருக்கிறேன். நண்பனொருவன் எழுதிய கடிதமொன்று எனக்கு அதனை முற்றாக வேறுபடுத்திக் காட்டியிருந்தது.

"...... ஒரு சில மணித்தியாலங்களே கண்மூடித் துயிலமுடியும். பல மணித்தியாலயங்கள் இயந்திரங்கள் மத்தியில் நின்று இயந்திரமாய் தொழிற்படவேண்டும். அப்படி உழைத்தாலேயே பணம் சேர்க்கமுடியும் அதுதான் போகட்டும். அங்கே வேலைசெய்யும் தொழிற்சாலைகளிலும், வேறு இடங்களிலும் அந்நாட்டவர் அந்நியர்களாக எம்மைப் பார்க்கும் பார்வைகள்- பழகும் முறைகள்- துவேசமான வார்த்தைகள்- சுயகௌரவம் உள்ள எந்தவொரு மனிதனாலும் தாங்கமுடியாதவை ஆனால், எம்மால் எதுவும் திருப்பிக் கதைக்கவும் முடியாது..."

இவ்வாறு அந்தக்கடிதம் தொடர்கிறது.

இதனை உண்மை என்று நிரூபிக்கும் வகையில் அண்மையில் சில செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.

'சுவிஸ்சர்லாந்தில் தமிழ் அகதிகள் இருந்த அகதிமுகாம்கள் மீதும் குடியிருப்புகள் மீதும் அந்நாட்டைச் சேர்ந்த குழுவொன்று தாக்குதல் நடத்தியது'

'ஜெர்மனியில் இலங்கைத்தமிழ் அகதிகள் முகாம்களின் மீது அந்நாட்டுத் தீவிரவாதக் குழுவினர் பெற்றோல் குண்டுகளையும் தீப்பந்தங்களையும் வீசித் தாக்கினர்.'

இவ்வாறான செய்திகளை செய்திப் பத்திரிகைகளில் தினசரி பார்க்கக் கூடியதாகவுள்ளது.

இன, நிறத்துவேசங்கள் அங்கும் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியுள்ளன.

வெளிநாடுகளில் தொழில் செய்வோரின் குடும்பங்கள் பல அண்மைக்காலங்களில் இங்குள்ள நிலைமைகளைத் தாக்குப்பிடிக்கமுடியாமல்தமிழ்நாட்டிற்குச்சென்று வாழத்தொடங்கியமை தெரிந்தவிடயமே.



சென்னை அண்ணாநகரை குட்டி யாழ்ப்பாணம் என்று சொல்வார்கள்.

இந்திய அரசின் கெடுபிடிகளினால் தற்போது அவர்களும் பெரும் பிரச்சினைகளுக்குள்ளாகி வருகின்றனர்.

முன்னர் இங்கு நடந்ததைபோல அங்கும் அப்பாவி இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் வீடுகள் திடீர் திடீரென சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டுப் பொலிஸ் நிலையங்களில் நீண்டவரிசைகளில் காக்கவைக்கப்பட்டு நம்மவர்கள் பதிவு செய்யப்படுகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது இளம் பெண்கள் அங்குள்ள பொலிசாரின் காடைத்தனங்களுக்கும் ஆளாவதாக தமிழ்நாடு அரசியல்வாதி ஒருவர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க -

வெளிநாடு சென்ற நமது இளைஞர்கள் சிலரால் தமிழனின் தனித்துவம், பண்பாடு என்பன சீரழிந்து வருகின்றன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது

## விவேக்

சர்வதேச குற்றச் செயல்களான போதைவஸ்து கடத்தல் போன்ற செயல்பாடுகளிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

பலர் ஏமாற்றத்தினாலும், விரக்தியினாலுமே இந் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மத்தியகிழக்கு நாடுகள் சிலவற்றில் தொழிலுக்காகச் சென்ற நமது பெண்களும் தவறான வழிகளுக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளனர்.

அண்மையில் வளைகுடாயுத்தம் நடந்த வேளை குவைத்திலிருந்து நாடுதிரும்பியோர் சிலரைச் சந்தித்து உரையாடிய போது கசப்பான பல உண்மைச் சம்பவங்களை அவர்கள் கூறினர்.

இவற்றையெல்லாம் சொல்வதால் வெளிநாடு சென்று தொழில் புரிந்து பண்பாடாக வாழ்க்கை நடாத்தும் நம்மவர்கள் இல்லை என்பது பொருளல்ல.

இது ஒரு பக்கம் மட்டுமே. ஏனைய பக்கங்கள் வேதனையானவை.

எனவே -

வெளிநாடு சென்று நமது உறவினர்கள் அனுப்பும் பணத்தில் பகட்டாகத் திரிவதையும், அயலவர்களிடம் சொல்லி மகிழ்வதையும் மட்டுமே பெருமையாகக் கொள்ளாமல், அங்கு அவர்கள் படும் துன்பங்களுக்காக கொஞ்சம் வேதனைப்படுவோம். இதற்கான தீர்வினை எமக்குள் நாம் சிந்திப்போம்.

வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளை ஆராய்வோம்.

## எனக்குள் நான்

நச்சுப் பூக்களின் நடுவே
நகர்ந்தது வாழ்க்கை
சுவாசக் காற்று
எனக்குள் சென்று அரிக்கும்.

முட் பற்றைகள் சூழ்ந்த
காடாக மனம்.

பின் வாங்கி
பின் வாங்கி
அருவருப்பான சுவடுகளில்
மீண்டும் கால்கள் பதியும்.

பாறைகளில் மோதி
குருதியும் சீழுமாய் வழியும்.

இலட்சிய நதி
இலக்கை நோக்கி
ஓட விடாமல்
இடையில் திசைமாற்றியது
யார் ......?

விழிகளை மறைக்கும்
நிழற் திரைகள்
கிழிபட வேண்டும்

பூகம்பம் ஒன்று வெடித்தது
நான்
புதுப்பிக்கப்பட வேண்டும்.
மன அரங்கில்
பிரளய மொன்று
நிகழ வேண்டும்.

எனக்குள் நான்
ஆயிரம் தடவைகள்
மடிந்து
புதிதாய் பிறக்கவேண்டும்.

புயலே வருக
எனக்குள் எழுக!

## கண்ணீர்

மயிலாடவில்லை
குயில் பாடவில்லை
மந்தியினமும் மரங்களிலே
தாவவில்லை
விரைந்து வந்த
விண் மழையும்
வியந்து நின்றது.
மண்ணுலகம் முன்னரே
மானிடரின் கண்ணீரால்
நனைந்திருந்ததால்.

மூ. விஜயராகவன்
யாழ். இந்துக்கல்லூரி




## பட்டம்

பட்டப் படிப்பென்பது
இன்று-
ஒரு தொகை நூல்களை
மனனம் செய்து
ஒப்புவித்தல் மட்டுமே
இதனால் -
ஆய்ந்தறிந்த
மெய் விளக்கமின்றி
மாணவ அறிவு
குறுகி நிற்கிறது.

— கிருஷ்ணபிள்ளை குருபரன்
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு.

## தவறு

ஐந்திலே நாங்கள்
வளைக்க வேண்டியதை
வளைக்காமல் விட்டதனால்
ஐம்பதிலே இன்று
நாங்களே வளைந்து போய் ......
கல்லிலும், முள்ளிலும்
வாழ்க்கை நடக்கிறது
மூன்று நூற்றாண்டுகளாக!

நா. நந்தகுமார்.
இல. 146, ஸ்கந்தபுரம்
கிளிநொச்சி.

## செம்மையற்ற பாதைகளில் செம்மையான முடிவுகள்

பனி படர்ந்த பாதையில்
பயணங்கள் போகலாம்
அது உயர்ந்த இலட்சியத்திற்காகவெனில்
அங்கு குளிராது.

பாலைவனங்களில்
முகாம்களை அமைக்கலாம்
வென்று பெறவேண்டிய
சுதந்திரத்திற்காக வெனில்
வேகாது.
ஆற்றிலும் அரண்களை அமைக்கலாம்
அனைத்து மக்களுக்குமெனில்
அது அடித்துச் செல்லாது.

மொத்தமாய்
முயற்சிகள் எல்லாம்
முழுமனித நன்மைக்குமெனில்
தோன்றும் பகுதிகளில்
தோல்வியே கிடையாது.

— நாகலிங்கம் ஜெயகரன்
ஆண்டு 10
கனகபுரம் வித்தியாலயம்
கிளிநொச்சி

## ஓவிய வாக்கியம் பரிசுக் கவிதை

பசுமை கொழித்த எமது மண்ணில்
பச்சை இரத்தம் வழிகிறது.
பச்சைக் குழந்தை மனதினிலே – அது
பசுமரத்தாணி போல் பதிகிறது.

அரைவாசி உயிர் போன பின்பும்
அந்தத் தமிழன் கரம் பேசுகிறது.
அரக்கர் செயல்கள் முடிவுபெற
காலம் வருமென சொல்கிறது.

எஸ். பபி சுபாங்கனி
(விஞ்ஞானப் பிரிவு)
மெதஸ்டித பெண்கள்
உயர் கல்லூரி
பருத்தித்துறை.

## தெறிப்பு

சாளரத்தில் வெளியாகும் நுண்ணறிவுப் போட்டி, கவிதைகள் உட்பட எல்லா விடயங்களையும் படித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

சாளரத்தை வாரமொருமுறையாக வெளியிட முடியாதா? நான் யாழ் மத்திய கல்லூரியில் ஆண்டு 10 இல் பயின்று வருகிறேன். எனது சிறு ஆக்கங்களை அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

திருவிளங்கம் வாசுதேவன்
16/16 வளன்புரம்
யாழ்ப்பாணம்

❀ தற்போதைய சூழ்நிலையில் — காகிதத்தட்டுப்பாடு, மின்சாரமின்மையால் ஏற்பட்டுள்ள அச்சகவசதியீனங்கள், போக்கு வரத்துத்தடைகளால் ஏற்பட்டுள்ள விநியோகத்திற்கான இடைஞ்சல்கள் போன்ற பல்வேறு இடர்பாடுகளிடையே 'சாளரம்' மாத இதழை வெளியிட்டு வருகிறோம். காலம் கனிந்து வரும் போது உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். ஆக்கங்களை அனுப்பிவையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

ஒக்டோபர் மாதம் வெளியான 'சாளர'த்தில் பிரசுரமான 'இனத்திற்காக' உருவகக்கதை போராட்டக் கருத்தினை மேம்படுத்துவதாக அமைந்திருந்தது. இவ்வாறான உருவகக்கதைகளை தொடர்ந்து பிரசுரிக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

— மு. ராஜ்குமார்
உரும்பிராய்
இந்துக்கல்லூரி

ஈழத்திலும் தமிழகத்திலும் வெளியாகும் பத்திரிகைகள் பலவற்றில் ராணுவம், ரசாயனம், ராமன், லாபம், லங்காபுரி போன்ற சொற்பதங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. 'ர' 'ல' ஆகிய எழுத்துக்களை முதலெழுத்துக்களாகக் கொண்ட சொற்கள் தமிழ் அகராதியில் இல்லை. இவை இராணுவம். இரசாயனம். இராமன், இலாபம், இலங்காபுரி என்றே பிரயோகிக்கப்பட வேண்டும்.

காலப்போக்கில் பிறமொழிச் சொற்களும் தமிழகராதியில் இடம் பெற்று விடக்கூடும். 'பெஞ்சு' என்ற சொல் தற்போது கழகத்தமிழ் அகராதியில் புகுந்து விட்டது. 'சாளரம்' உட்பட தமிழீழத்திலிருந்து வெளிவரும் தினசரிகளும் சகல பத்திரிகைகளும் இயலுமான வரை தூய தமிழை பயன் படுத்தவேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

ந. பரமேஸ்வரன்

**உங்கள் கருத்தை 'சாளரம்' கவனத்தில் எடுத்துள்ளது.**

'சாளரம்' போன்ற பல தரப்பட்ட விடயங்களை யடக்கிய ஓர் திங்கள் ஏடு தமிழீழத்தில் வெளிவருவது மிகப் பலனுடையது. 'சாளரம்' மென்மேலும் வளர என் நல்லாசிகள்.

அ. சந்திரமோகன்
தனங்கிளப்பு
சாவகச்சேரி

நறுந் தமிழ் மணக்கும் தூய
நற்குண மக்கள் வாழும்
செறிகலைச் செல்வம் மற்றும்
செம் பொருள் யாவும் மேலும்
அறிவினை வளர்த்து நல்ல
அன்பொடு அறமுமூட்டும்
சாளரம் என்றுமிந்த தரணியில்
வாழ்க வாழ்க!

சி. சுதர்சன்
ஆண்டு 9
யா/வதிரி திரு இருதயக் கல்லூரி
நெல்லியடி

சாளரத்தினூடாகப் புதியகாற்று இளையோர் இதயங்களை நிரப்புகின்ற அதே நேரம் சற்று வயது வந்தோரும் வாசிக்கக்கூடிய விதத்தில் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இப்போராட்டகாலகட்டத்தில் இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் இவ்வாறானதோர் சிறந்த இதழ் வெளியாகிக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது. பின்தங்கிய கிராமமான எமது பகுதிக்கு இவ்விதழ்கள் வருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இ. சிவலிங்கம்
உருத்திரபுரம்
கிளிநொச்சி

'சாளரம்' இளையோருக்கான இதழாக இருப்பதால் சில கடுமையான சொற்களைத் தவிர்த்து எளிமையான சொற்களைப் பயன்படுத்தினால் கட்டுரைகள் இலகுவாக வாசித்தறிய வசதியாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

ஆ. ஞானேஸ்வரன்
உடையார்கட்டு

சாளரம்

கதவு 1 காற்றலை 6

# உலக ஆசிரியர் வருடம் 1991

1991ஐ உலக ஆசிரியர் வருடமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியிருந்தது. ஆனால் இலங்கைத் தீவிலோ ஒக்டோபர் 6ம் திகதி ஆகிய ஒருநாள் மாத்திரமே உலக ஆசிரியர் தினமாக கொண்டாடப் பட்டது. கல்வி இலாகாவோ, ஆசிரியர் தொழிற் சங்கங்களோ, இல்லை ஏனைய சுயாதீனமான ஆசிரியர் அமைப்புகளோ உலக ஆசிரியர் தினம் சம் பந்தமான எந்தவித வேலைத்திட்டத்தையும் கொண் டிராதது வேதனைக்குரிய விடயமேயாகும். ஆசிரியர் களை கைக்கருவிகளாக பயன்படுத்தும், ஆசிரியர்களின் அதிகாரத்துவ எஜமானனான கல்வி இலாகா இது தொடர்பாக அக்கறை எடுக்காது விட்டது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. ஆனால் ஆசிரியர்கள் தமது கௌரவத்தை பேணுவது தொடர்பான நிகழ்ச்சிக ளுக்கு கூட கல்வி இலாகாவையே முழுமையாக எதிர் பார்த்து நிற்றல் என்பது பரிதாபத்துக் குரியதேயாகும்.

ஆசிரியர்களின் கௌரவம் மதிப்பிறக்கப்பட்ட நிலையைப் போக்குவதற்கு ஆசிரியர்கள் விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக இவ்வருடம் ஒதுக்கப்பட்டது. ஆனால் எதுவுமே நடக்க வில்லை.

இன்று ஆசிரியர்களில் மிகப் பெரும்பான்மையோர் தமது நிலையை மிக நன்றாகவே, உணர்ந்துள்ளார் கள். ஆனால் ஆசிரியர்கள், குறிப்பாக வட தமிழீழ ஆசிரியர்கள் அதற்கான காரணத்தையும் இந்நிலையை மாற்றுவதற்கான வழிவகைகளையும், ஆசிரியர்களாகிய தாம் ஒரு சக்தி மிக்க சமூக தட்டு (Social strata) என்பதையும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

வருமானம் போதாமைதான் தமது பிரச்சனை களுக்கான மூலகாரணம் என்றே அவர்கள் கருதுகி றார்கள். இப் பிரச்சனையைக் கூட கூட்டாக தீர்ப் பதற்கு பதிலாக தனித் தனிநபர்களாகவே தீர்வு காண முயலுகிறார்கள். ஓர் சாரார் வியாபாரத்திலும், விவசாயத்திலும் ஈடுபடுகிறார்கள். இவ்வித ஈடுபாட் டால் ஆசிரியருக்குரிய கடமையை புறக்கணிக்கும் அளவிற்கு சிலர் நடந்து கொள்கிறார்கள். இதனால் தமது சமூக கௌரவத்தை தாமே கெடுத்துக் கொள் கிறார்கள்.

மற்றோர் சாரார் தனிமுறைக் கல்வி நிறுவனங் களில் (Private tution centre) போதிக்கிறார்கள். இதன் மூலம் இவ்வித வாய்ப்பற்ற பல ஆசிரியர்கள் தமது பாடசாலையில் மதிப்பிழக்க காரணமாய் அமைகி றார்கள்.

வேறோர் சாரார் 'பிரமுகர்களாக' தம்மை காட் டிக்கொள்வதன் மூலம் தமக்கென்றோர் கௌரவத்தை ஈட்டிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இதற்காக ஆசிரி யருக்குரிய தமது கடமையைக் கூட தாரைவார்க்கத் தயாராய் உள்ளார்கள்.

இன்னோர் சாரார் தமக்கென்றோர் திட்டவட்ட மான அரசியல் குறிக்கோளோ, அர்பணிப்போ இன்றி அரசியலாளர்களுக்கு வால்கட்டித் திரிவதன் மூலம் சமூக கௌரவம் பெறலாம் என அலைகிறார்கள்.

மிக வல்லமை பெற்ற ஆசிரியர் என்ற இந்த சமூகத் தட்டு எதற்காக இவ்வித குறுக்குவழிகளைக் கையாள வேண்டும்? தனிநபர்களாக எதற்காக இப்படி பிரிந்து பிரிந்துசிதறுண்டு இருக்கவேண்டும்?

ஆசிரியர்களே!, மதிப்புக்குரிய மூளை உழைப் பாளர்களே! போற்றி பூசிக்கப்பட வேண்டிய ஆசான் களே!

அவநம்பிக்கை + தயக்கவாதத்தை (Pessimism) களைந் தெறியுங்கள்.

உங்கள் மாபெரும் சக்தியைப் புரிந்து கொள்ளுங் கள்.

உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலுங்கூட போர்க் கால நெருக்கடிகளுக்கு மத்தியில் பல ஆசிரியர்கள் தமது கடமைகளில் கண்ணாயிருப்பது வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும். அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு தனிப் பெரும் கூட்டு சக்தியாக மாறி கடமையிலும் உரிமையிலும் கண்ணாயிருங்கள்!

'சாளரம்' ஆய்வரங்கு கடந்த 9-11-91 சனிக் கிழமை 9.30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றது. கடந்த ஒக்டோபர் மாதம்வரை வெளியான ஐந்து 'சாளரம்' இதழ்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

'சாளரம்' ஆசிரியர் குழுவைச்சேர்ந்த திரு. சிவா சுப்பிரமணியம் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சபா ஜெயராசா, விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி, அரசறிவியல் மாணவன் திரு. யோ. ஜெயகாந்தன், இலக்கியவிமர்சகர் திரு. அ. யேசுராசா, யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சிதம்பரநாதர், யாழ் வேம்படிகல்லூரி மாணவி செல்வி. அம்பிகை டிவகலாலாஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

# சாளரம் ஆய்வரங்கு

கலாநிதி சபா ஜெயராசா அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''மாணவர்களை இயந்திரங்களாக அல்லாமல் இலக்கு மாந்தர்களாக உருவாக்கும் கல்விமுறையே நமக்குத் தேவையானது. ஒரு சமூகத்தின் மேம்பாட்டை வெளிப்படுத்தும் முக்கியமானதொரு அம்சமாக கல்வியே திகழ்கிறது. ஒரு தனிமனிதனின் சுயநல நோக்கிற்காக அன்றி சமூக நோக்கிற்காகவே கல்வி பயன்படவேண்டும். பல நாடுகளில் கல்வி முறையை ஓர் வங்கி முறையாக்கிவிட்டார்கள். பாடங்களை மாணவர்கள் மனங்களில் திணித்துவிட்டு தேவையான பொழுது (பரீட்சையின்போது) அதனை மீள எடுத்தல் என்பது இம்முறையாகும். அதிகமாக ஒடுக்கப்படும் இனங்கள் வாழும் நாடுகளில் உள்ள கல்விமுறையை ஆராய்ந்தவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். நாம் இம்முறையை உடைக்கவேண்டிய தேவை ஒன்றுள்ளது.

நமது நாட்டில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒரு சில மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பவே ஆசிரியர்களின் ஆற்றல் முழுவதும் பயன்படுத்தப்படுறது. 1960 தொடக்கம் 1990 வரை இங்கு படித்து பட்டம் பெற்ற சுமார் 3500 பொறியியலாளர், வைத்தியர்கள் எவரும் இப்போது இந்த மண்ணில் இல்லை. எல்லோரும் வெளிநாடுகளில் இருக்கின்றனர். முழு ஆற்றல்களையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இவர்கள் வெளிநாடுகளில் எமது பண்பாட்டையும் மறந்து இன மாறுதல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். கல்வி பற்றிய விழிப்புணர்வு இன்று எல்லோருக்கும் அவசியமாகிறது. பாரம்பரியமான பணியினை பாடசாலைகள் கைவிட்டு மாற்றம் பெறவேண்டும். தற்போதுள்ள பரீட்சை முறையில் ஒரேயொரு பண்பே மதிப்பீடு செய்யப்படுகிறது. ஆனால், மாணவர்களிடம் பல நூற்றுக்கணக்கான ஆற்றல்கள் உள்ளன. மனனம் செய்து ஒப்புவிக்கும் ஆற்றலே இப்போது அவர்களிடமிருந்து பெறப்படுகிறது. அவர்களின் உடலியல், மன எழுச்சி, படைப்பாற்றல் என்பன மதிப்பீடு செய்யப்படுவதில்லை. இதற்கான அடிப்படையுடன் 'சாளரம்' நடைபோடத் தொடங்கியுள்ளமை மகிழ்ச்சியான விடயமாகும்.''

திரு. மா. சின்னத்தம்பி அவர்கள் பேசும்போது: ''தமிழில் உரிய சொற்கள் பயன்படுத்தப்படுவதில்லை. அது சிறிது கடினமான விடயமாக இருப்பினும் புதிய சொற்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். 'சாளரம்' மேலும் இதை செயல்படுத்த வேண்டும்'' என்றார்.

வளர்ச்சி பெற்ற நாடுகளிலுள்ள சிந்தனையாளர்கள் காலத்திற்கொரு கருத்தினை முன்வைத்து அதைநோக்கி ஏனைய நாடுகளையும் திசை திருப்பி அந்தக் கருத்தினை பிறகு மாற்றிக் கொள்வதை அடிக்கடி அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 'சாளரம்' இதைப் போன்ற விடயங்களையும் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

திரு, சிதம்பரநாதர் அவர்கள் ''சமூக முரண்பாடுகள் சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதில் 'சாளரம்' கவனம் செலுத்த வேண்டும். இதற்கான விவாத மேடைகளை சாளரத்தில் ஆரம்பிப்பதும் சிறப்பானதே'' என்று கூறினார்.

திரு. அ. யேசுராசா அவர்கள் சாளரத்தில் வெளியான கலை, பண்பாடு சம்பந்தப்பட்ட விடயங்களை ஆய்வு செய்தார். கதை, கவிதை, மற்றும் இலக்கிய அம்சங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார்.

திரு. யோ. ஜெயகாந்தன் சாளரம் இதழில் உள்ள எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்து அவற்றின் குறைநிறைகளை விரிவாக எடுத்துரைத்தார். கட்டுரைகள் மேலும் தெளிவாகவும் வாசிக்க இலகுவாகவும் அமையவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

செல்வி. அம்பிகை டிவகலாலாவும் பொதுவாக எல்லா அம்சங்களையும் விமர்சித்ததுடன் பெண்கள் சம்பந்தமாகவும், பெண்விடுதலை சம்பந்தமாகவும் 'சாளரத்'தில் தொடர்ச்சியாக கட்டுரைகள் வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

இறுதியாக சாளரம் ஆசிரியர் திரு. கௌரிகாந்தன் உரை நிகழ்த்துகையில் ஆய்வுரைகள் ஆக்கபூர்வமானதாக இருந்தன எனவும், குறை, நிறைகளை கவனத்தில் எடுப்பதாகவும் ஆலோசனைகளை பரிசீலனைக்கெடுப்பதாகவும் தெரிவித்தார்.

# மாவீரரை நினைவு கூருவோம்!

இலங்கைத் தமிழர் மேல் சிங்கள பேரினவாத அரசு செலுத்திவந்த அடக்குமுறை 1977 உடன் யு. என். பி. அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியதுடன் ஒரு உச்ச கட்டத்தை அடைந்தது. தமிழர்களின் கல்வி வாய்ப்புகள் குறைக்கப்பட்டன. அரசாங்க துறைகளிலும் தனியார் துறைகளிலும் தொழில் பெறும் வாய்ப்புகள் கிட்டத்தட்ட முற்றாகவே அருகிவிடும் நிலையை அடைந்தது. தமிழீழ பிரதேசம் பொருளாதார ரீதியில் புறக்கணிக்கப்பட்டன. அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டன.

1977 ல் இருந்து 1985 வரை இலங்கைத் தீவெங்கணும் இடைவிடாத இனப்படுகொலைகளும், இன ஒழிப்புகளும் நடை பெற்று வந்தன. தமிழீழ பிரதேசத்துள்ளும், அதற்கு வெளியாலும் இவை சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாகின. சிறு விடயங்களுக்கு கூட தமிழன் தனது எதிர்ப்பையோ, வெறுப்பையோ வெளிக்காட்ட முடியாத நிலையே நிலவியது. தமிழீழம் மிகக் கடுமையான நெருக்கடிக்குள் சிக்கித் திணறியது.

தமிழீழத்தின் தன்னாட்சியுரிமையும், அத் தன்னாட்சி உரிமையைப் பெறுவதற்கான ஆயுதப்போராட்டமுமே இந் நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கான ஒரே மார்க்கமாக இருந்தது. ஏனைய சகல மார்க்கங்களும் அடைக்கப்பட்டு விட்டன. இன ஒழிப்புக் குணாம்சம் கொண்ட சிறிலங்கா அரசுடன் ஆயுதப் போராட்டம் நடத்துவது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. மிகச் சிரமமான விடயமாயிருந்தாலும் இதுநடத்தப்பட்டே ஆகவேண்டிய ஒரு விடயமாகவும் இருந்தது.

இந்த நெருக்கடிக் கட்டத்தில்தான், இந் நெருக்கடிகளில் இருந்து தமிழீழத்தை மீட்டெடுக்கும் ஆற்றல் கொண்ட 'மாவீரர்கள்' அவசியப்படுகிறார்கள். இவ் அவசியம் நிறைவேற்றவும்படுகிறது. தமிழீழ வரலாறு மாவீரர் சகாப்தத்துள் உட்புகுகிறது. முடிவில்லாத சங்கிலித்தொடர் போன்ற வீரர்களை தமிழீழ மக்கள் தோற்றுவிக்கிறார்கள். இன்றைய வரலாற்றின் தேவை நிறைவேற்றப்படுவதற்கு அடிப்படையாக அவசியப்படும் நியதிஒன்று பூர்த்தி செய்யப்படுகிறது.

இந்த 'மாவீரர்கள்' தோன்றியிருக்காவிடில், இன்று தமிழர் அனைவருமே அகதிகளாகவும், அடிமைகளாகவுமே இருப்போம். ''ம் என்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம்'' என்ற நிலையிலேயே இருந்திருப்போம்.

இங்குதான் 'மாவீரர்படையின்' சமூக முக்கியத்துவம் உள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் பயணம் இன்னமும் முடிவடையவில்லை. மாவீரர்களின் கடமை இன்னமும் முற்றுப்பெறவில்லை. இதுவரை பெற்ற வெற்றிகளைப் பாதுகாக்கவும்; இன்றைய நெருக்கடிகளையும், இனிவரப்போகும் நெருக்கடிகளையும் வெற்றிகரமாக தாண்டி முன்னேறவும்; இறுதி வெற்றியை உறுதிப்படுத்தவும் வேண்டுமானால், காட்டு வெள்ளம் போலவும்; சங்கிலித் தொடர்போலவும் தமிழீழ சமூகம் பல்லாயிரக்கணக்கான ''மாவீரர்களை'' மேலும் பிரசவிக்கவேண்டும்.

''மாவீரர்கள் தினம் வெறுமனே கடந்த காலத் தியாகிகளை நினைவு கூரும் ஒரு தினமல்ல. மாறாக நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் அவசியமான பல்லாயிரக் கணக்கான ''போர் தியாகிகள்'' உருவாகுவதற்கு அவசியமான சமூக சூழலை உருவாக்கும், துரிதப்படுத்தும் ஒரு தினமாகும். இத் தினத்தில் உங்கள் கடமையை உணர்ந்து கொண்டு, உங்கள் திறமையை இணங்கண்டு, தேச விடுதலைக்கும் மக்கள் சுதந்திரத்திற்குமான முயற்சியில் உங்களை அர்ப்பணியுங்கள்.

**தியாகங்கள் என்றும் வீண்போவதில்லை!**

எமது மண்ணில் விளையும் சத்துக்கள் நிறைந்த, சு

★ மாம்பழம்

★ திராட்சைப்பழம்

★ பனம்பழம்

★ விளாம்பழம்

போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்படும்

# அர்ச்சயா


## பானங்களை அருந்துவோம்

எந்தவித ஊட்டச் சத்துமில்லாத இரசாயனப் பொருட்கள்
கலந்த பானங்களை நிராகரிப்போம்

## அர்ச்சயா பானங்கள் இருக்கும் போது அவை எதற்கு?

தமிழீழ ஆய்வு நிறுவன தயாரிப்பு

# ஓவியம் ⇄ வாக்கியம்



5.30-6.45 ரியூசன்
6.45-8.00 பாடசாலைக்கு ஆயத்தம் சாபபாடு
8.00-3.00 பாடசாலை
3.00-4.00 வீடுதிரும்பி சாப்பாடு
4.00-5.00 ரியூசன்
5.00-6.00 அப்பாவிடம் ஆங்கிலம் படித்தல்
6 00-8.00 வீட்டு வேலை
8.00-10.00 படிப்பு
10.00 பின் படுக்கை

இந்தப் படத்தைப் பாருங்கள். பொதுவாக மாணவர்களின் தினசரி செயற்பாடுகள் இவ்வாறுதான் அமைந்துள்ளன. ஓர் இயந்திர இயக்கத்தைப் போல!
இதற்குப் பொருத்தமான வரிகளை எமக்கு உடனே அனுப்பி வையுங்கள்.